தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2012–2013)

(பதினான்காவது பேரவை)

பத்தாவது அறிக்கை

"உயர் கல்வி"

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 15.05.2013)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2012–2013)

(பதினான்காவது பேரவை)

பத்தாவது அறிக்கை

"உயர் கல்வி" குறித்த மதிப்பீடுகள்
தொடர்பான குழுவின் அறிக்கை

பொருளடக்கம்

		பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	v
முன்னுரை	...	vii

பாகம் – 1 அறிக்கை

	முகவுரை ...	1

உயர்கல்வி

I	உயர்கல்வித் துறையின் தொலைநோக்குப் பார்வை ...	2
II	உயரிய நோக்கம் ...	2
III	குறிக்கோள்கள் ...	2
IV	உயர்கல்வித் துறையின் மூலம் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் ...	2–3
V	அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை அறிமுகம் ...	3
VI	அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக்கட்டண விலக்கு மற்றும் இலவச பேருந்து கட்டணச் சலுகை ...	3–5
VII	பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்சி திட்டங்கள் ...	5
VIII	உலகத்தரம் வாய்ந்த உயர் கல்வியை வழங்குதல் ...	6
IX	மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வெளிப்படுத்துதல் ...	6–7
X	அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்லூரியில் கட்டண அமைப்பைச் சரி செய்தல் ...	7
XI	சமுதாயத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு சமூக பொருளாதார மேம்பாடு ...	7–8
XII	கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்	8–9
XIII	தொழில்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டண விலக்கு	9–10

XIV	செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள்	...	11 –14
XV	இலவச கல்வித் திட்டம்	...	14
XVI	இந்திய ஆட்சிப்பணி மற்றும் இதர பணிகளுக்கான தேர்விற்கு பயிற்சி வழங்குதல்	...	14–15
XVII	பட்டப்படிப்புடன் பட்டய/சான்றிதழ் படிப்புகளை பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகளில் உருவாக்குதல்	...	15–16
XVIII	பொது மற்றும் தனியாருடன் இணைந்து புதிய இந்திய தகவல் தொழில்நுட்ப கழகம் அமைத்தல்	...	16–17
XIX	புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்குதல்	...	17–18
XX	மத்திய அரசு நிதி உதவியுடன அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் அமைத்தல்	...	18–21
XXI	தொன்மைவாய்ந்த வரலாற்று சின்னங்களை பராமரித்தல்		21–22
XXII	தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி மாநில மன்றத்தின் செயல்பாடு	...	23
XXIII	தமிழ்வழி பயிலும் மாணவ/மாணவியர்க்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்	...	24
XXIV	பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்	...	24–25
XXV	அரசு கல்லூரிகளில் உதவி பேராசிரியர் பணியிடங்களை நிரப்புதல்	...	25–26
XXVI	ஆசிரியரல்லாத காலிப்பணியிடங்களை நிரப்புதல்	...	26
XXVII	அரசு உதவி பெறும் கல்லூரிகளில் (Government Aided Colleges) காலிப்பணியிடங்களை நிரப்புதல்	...	26
XXVIII	கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்குதல்	...	27
XXIX	கல்லூரி கல்வி இயக்ககத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டுதல்	...	27–33
XXX	மத்திய அரசின் நிதி உதவித் திட்டம்	...	33–34
XXXI	மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்	...	34

பாகம் –2

நிகழ்ச்சிப் பகுதி 35–49

	பரிந்துரைகளின் சுருக்கம்	...	50–56
	குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	...	57

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2012–2013)

(2012–ஆம் ஆண்டு மே திங்கள் 19–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி அமைச்சர் (அலுவல் காரணமாக)

3. திரு. ச. இராமச்சந்திரன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. வி. சோமசுந்தரம்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திருமதி த. இந்திராகாந்தி
6. திரு. டி. இராமச்சந்திரன்
7. திரு. செ. காமராஜ்
8. டாக்டர் க. கிருஷ்ணசாமி
9. திரு. ஆர். சாமி
10. திரு. ஆர். சீனிவாசன்
11. திரு. டி. செங்குட்டுவன்
12. திரு. தங்கதமிழ்செல்வன்
13. திரு. ப. தன்சிங்
* 14. திரு. கு. நல்லதம்பி
15. திரு. வ. நீலகண்டன்
16. திரு. அ. பாப்பாசுந்தரம்
17. செல்வி கே. பாலபாரதி
18. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
19. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

$ திருமதி சி. சகுந்தலா . . சார்புச் செயலாளர்

* 25.3.2013 முதல் 24.9.2013 வரை 6 மாத காலத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

$ 20.11.2012 ஆம் நாள் முதல்

முன்னுரை

2012–2013–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 19.5.2012–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு நிதியமைச்சர், பொது கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2012–2013–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நான்கு துறைகள் தொடர்பான மதிப்பீடுகளில், **"உயர் கல்வி"** மதிப்பீடும் ஒன்றாகும். **"உயர் கல்வி"** குறித்த மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய 9 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. 26.4.2013 அன்று சென்னையில் உயர் கல்வி துறையின் அரசு முதன்மைச் செயலாளர், கூடுதல் செயலாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர், ஆணையர் தொழில்நுட்ப கல்வி மற்றும் இதர துறையின் அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு 10.5.2013 அன்று குழு ஒப்புதல் அளித்தது. **"உயர் கல்வி"** குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், **"உயர் கல்வி"** குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

"உயர் கல்வி" தொடர்பான மதிப்பீடுகளை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த உயர் கல்வித் துறை அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் (Bold) அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: 10.5.2013,
சித்திரை 27,
திருவள்ளுவர் ஆண்டு – 2044.

பி.ஜி. நாராயணன்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

பாகம்–I அறிக்கை

" உயர்கல்வி " குறித்த அறிக்கை

கல்லூரிக் கல்வி

முகவுரை

உயர் கல்வி என்பது மொழி, கலை, அறிவியல், பொறியியல் மற்றும் தொழில் நுட்பப் படிப்புகளின் மூலம் ஒருவர் தேர்ந்தெடுத்த துறையில் பட்டயம், இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சியில் பட்டங்கள் பெறுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது. பல்தொழில் நுட்பக் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் மிகச் சிறந்த மனிதவளத்தை உருவாக்குவதற்கும், உயர்கல்விக்காக அரசு அளிக்கும் இவ்வாய்ப்புகள் ஏழை, எளிய மக்கள் பெறுவதை உறுதி செய்வதற்கும் அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

2. உயர்கல்வி என்பது அறிவைப் பெறுதலும், பலவகையான மாறுபட்ட காலத்திற்குத் தேவையான திறன்களைப் பெறுதலும், வளர்கின்ற மனித சக்தியை முன்னேற்றுவதற்காகவும், இருத்தல் வேண்டும். கூடுதலான கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களையும் நிறுவி, கல்வி பெறும் மாணவர்களின் குறிப்பாக, மாணவிகளின் சேர்க்கையை பெருமளவில் அதிகரித்து, கறித்தல் மற்றும் கற்றல் முறைகளை உலகத் தரத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் முனைப்புடன் அரசு செயல்பட்டு வருகிறது.

3. உயர்கல்வி, மனித வளர்ச்சிக்கு ஆதாரமான தூணாகவும், மரபுவழிக் கல்விமுறைக்குச் சிகரமாகவும் விளங்குகிறது. தொழிலாளர் சந்தைக்குத் தேவையான உயர்ந்த திறன்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், குடிமைப் பணியாளர்கள், விஞ்ஞானிகள், தொழில் முனைவோர்கள் மற்றும் பல தொழில் வல்லுநர்களுக்கு அடிப்படையான மேம்பட்ட திறன்களையும் உயர்கல்வி வழங்குகிறது. பகுத்தாயும் திறன்கள் மற்றும் செயல் வல்லமையுடன் பயிற்சி பெற்ற இத்தகைய தனி நபர்கள்தான் ஒட்டுமொத்த சமூகத்திற்குத் தொடர்புடைய தேவையான முடிவுகளைச் செயலாக்குபவர்களாக இருக்கின்றனர்.

4. பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் நலனிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. உயர்கல்வியில் ஆண் – பெண் வேறுபாடின்மை, கிராம–நகர சமமற்ற தன்மையைச் சரிசெய்தல், ஆகியவற்றை அடைவதற்கு வழிமுறைகள் உறுதிசெய்யப்படும். மேலும், மாணவச் சமுதாயம், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வித்துறையுடன் தொடர்புடையவர்கள் ஆகிய அனைவரையும் ஒருங்கிணைத்து உயர்கல்வியை வளப்படுத்துவதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்படும். தொழிற்சாலை நிறுவனக் கூட்டிணைவு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் இல்லாத நிலையை மாற்றி, இன்றைய உலகச் சூழலுக்கு ஏற்றவாறு தொழிற்சாலை நிறுவனக் கூட்டிணைவிற்கு ஏற்றவாறு ஆசிரியர்களின் புலமை மற்றும் திறமைகளை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு கிட்டுமாறு வழிவகுத்தல் இன்றியமையாதது. அறிவு அடிப்படையிலான உழைக்கும் சக்தியுடன் மக்கள் தாங்களாகவே, புதிய திறன்களை உள்வாங்கிக்கொள்ளும் திறமைகளோடும், முதிர்ந்த ஆற்றலுடனும், அர்ப்பணிப்புடனும் செயல்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் உயர்கல்வித்துறையின் வாயில்களிலிருந்து பெருமிதமாக வெளிவருவார்கள்.

I. உயர்க்கல்வித்துறையின் தொலைநோக்குப்பார்வை

5. உயர்கல்வி நிறுவனங்களைப் புதுமைகள் நிறைந்த நேர்த்தியான மேம்பாட்டு மையங்களாக உருவாக்குதல்.

6. கிராமப்புற பின்தங்கிய மற்றும் ஆதிதிராவிடர் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு அவர்களின் திறமைகள், செயல்திறன் வெளிப்படும் வகையிலும் மேம்படும் வகையிலும் மற்றவர்கள் ஏற்கும் வகையிலுமான உலகத்தரம் வாய்ந்த கல்வி வழங்குதல்.

7. இந்நூற்றாண்டின் தேவைகள் மற்றும் அறைகூவல்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை ஆயத்தம் செய்து அனைத்து தரப்பினருக்கும் விடுபடாமல் உயர்கல்வி வழங்குதல்.

II உயரிய நோக்கம்

8. "தன்னார்வ ஊக்குவிப்புடன் செயற்படும் நிறுவனங்கள் வாயிலாக மனிதவள மேம்பாட்டினை வளர்ப்பதும், பண்பாடும் சால்பும் கொண்டு வல்லுநர்களை உருவாக்கி, மாநிலத்தையும், நாட்டையும் செழுமைப்படுத்துவதும், உலகளாவிய நிலையில் ஒப்பற்ற மணவர்களை ஈர்க்கும் பல்கலைக்கழகக் கல்வியினை வழங்கும் உன்னதமான இடமாக தமிழ்நாட்டை உருவாக்குவதும்" – உயர்கல்வித் துறையின் நோக்கமாகும்.

III. குறிக்கோள்கள்

9. கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்தி வழங்குதல்.

10. உலகத்தரத்திற்கு இணையான (World Class Standard) தரமான கல்வி வழங்குதல்.

11. ஆராய்ச்சிமுறை மற்றும் திறன்களை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறும் வகையிலும் தொழிற்சாலை – நிறுவன உறவு இணக்கத்தை எளிதாக்கித் தொழில் முனைவு நெறியை பயிற்றுவித்தல்.

12. மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை வெளிப்படுத்தல்.

13. தொலைதூரக்கல்வித் திட்டங்களை ஒன்றிணைத்துப் புத்துயிரூட்டி பொலிவேற்றம் செய்தல்.

IV. உயர்கல்வித் துறையின் மூலம் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

14. சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின் தங்கிய கிராமப்புற மாணவர்களும் கால மாற்றத்திற்கேற்ப கணினி பயன்பாட்டினை தெரிந்து கொள்ளும் வகையில் கணினி பாடப்பிரிவு பயிலாத மாணவர்களும் கணினி அறிவு பெற கணினி அறிவு திட்டம், என்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இந்தப் பயிற்சி பெற்ற மாணவர்களும் கணினி பயன்பாட்டினை தெரிந்து வைத்துள்ள மாணவர்களும் கணினி வழி கற்றல் மேற்கொள்ளவும் இணைய வழி செய்தி அறிவு பெருக்கத்திற்கும் உதவும் வகையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவ மாணவியருக்கு விலையில்லா மடிகணினிகள் வழங்கப்பெற்று, அவை மாணவர்களால் செவ்வனே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

15. அரசு, அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகள் / பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் / பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. மாணவர்களுக்கு 3,35,086 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. சிறந்த தரத்திலான கல்வியின் பலன்களை இளைஞர்கள் பெறுவதற்கும், நம் மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்வதற்கு துறையால் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

16. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரிலிருந்து வரும் மாணவர்களுக்கு உதவுவதற்காகவும், அவர்கள் தொழில்நுட்பக் கல்வியை தொடரவும் இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்கு தகவல் பரிமாற்ற ஆங்கிலம் I & II, பொறியியல் கணிதம் I முதல் IV, பொறியியல் இயற்பியல் I & II மற்றும் பொறியியல் வேதியியல் I & II ஆகிய பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2012–13ஆம் ஆண்டில், 12,065 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தனர். இதற்காக, ரூ.14,25,000/– செலவிடப்பட்டுள்ளது என துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

V.அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை அறிமுகம்.

17. 14 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சுழற்சிமுறை திட்டமானது, தகுதியுள்ள, கிராமப்புறங்களிலிருந்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்கள் தொழில்நுட்பக் கல்வியில் பட்டயம் பெற உதவுகிறது. இதனால் அவர்கள் பயன்மிக்க வேலைவாய்ப்பை பெற வழி ஏற்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டில் 3,037 மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர்.

18. வாழ்க்கையின் விளிம்பிலிருக்கும் குடும்பங்களுக்கும் தொழிற்கல்வி சென்று சேரவேண்டும் என்ற தமிழக அரசின் நோக்கமானது, ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டின்கீழ் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் திட்டத்தின் மூலம் எதிரொலிக்கிறது. 2012–13 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,48,064 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். இதற்காக, ரூ.478.7 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டமானது, ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் தமிழக முகாம்களில் வாழும் இலங்கை அகதி மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

19. முகாமில் வாழும் இலங்கை தமிழ் அகதிகளின் மாணவ/ மாணவியிர்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்தியதற்கு குழு தனது பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறது.

VI. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு மற்றும் இலவச பேருந்து கட்டணச் சலுகை

20. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம், இலவச பேருந்து அட்டை வழங்கும் திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

i. காணொலிக் காட்சியுடன் கூடிய செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள் ரூ.2 கோடி செலவில் 10 பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த உயர் தொழில்நுட்ப வசதிகளால், வகுப்பறை கற்பித்தல் மேம்பட்டுள்ளது.

ii. மாணவர்களின் மொழித்திறன்களை உயர்த்தி அவர்களை உலகச் சந்தையில் போட்டியிட தயார்படுத்தும்வண்ணம் ஆங்கிலம், சீனம், ஜப்பான், ஜெர்மன் போன்ற அயல்நாட்டு மொழிகளை கற்பதற்கான ஆய்வகங்கள் ரூ.1.5 கோடி செலவில் 10 பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டுள்ளன.

iii. மாணவர்களின் தொழில் முனைவுத் திறன்களை மேம்படுத்தி அவர்களிடம் உள்ள படைப்பாற்றலை வெளிக் கொணர்ந்து, அவ்வகை தொழில் நிறுவனங்களை உருவாக்கவும், வேலை வாய்ப்புச் சந்தையில் அவர்களுக்கேற்ற நல்லதொரு வாய்ப்பினை பெறவும் தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் 10 பல்கலைக்கழகங்களில் ரூ.2 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

iv. புகழ்பெற்ற வெளிநாட்டு பேராசிரியர்களை வரவழைக்கும் திட்டமானது 10 பல்கலைக்கழகங்களில் ரூ.1 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் கற்பித்தல் மற்றும் கற்றலில் பன்னாட்டு செயல்திறன் நுட்பங்களை அறிந்து கொள்வதுடன், அப்பேராசிரியர்களின் சிறப்பு அறிவினை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பினையும் பெறுகிறார்கள்.

v. பல்கலைக்கழக வணிகக் கூட்டிணைவு மையம், சென்னை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மற்றும் அழகப்பா பல்கலைக்கழகம் ஆகிய 6 பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் தமிழ்நாடு, இந்தியா மற்றும் வெளிநாட்டில் உள்ள முன்னணி தொழிற்சாலைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் முகமைகளாக செயல்படும். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தொடர்பு மையமாக செயல்படும் என்றும், அம்மன்றம் மற்றும் சென்னை, பிரிட்டிஷ் கவுன்சில் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெளிநாடு சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளில் படிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது, குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பகுதிகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பெரும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மேலும், நிர்வாகிகள், கல்வியாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களிடையே இத்திட்டம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் செப்டம்பர் 2013 முதல் ஜனவரி 2014 வரையிலான ஒரு பருவத்தை படிப்பதற்காக 25 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

vi மாற்றுத் திறனாளிகளுக்கான பலவடிவ கருவிகள் தயாரிக்கும் மையம் தமிழ்நாட்டில் உள்ள 10 பல்கலைக்கழகங்களில் அமைக்கப்பட்டுள்ளன என்றும், அம்மையங்களில் மாற்று திறனாளி மாணவர்களுக்கு தேவைப்படும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பல்வேறு தலைப்புகள் மற்றும் பாடங்களுக்கான தொடுஉணர் வரைகலை(Tactile Graphics) இடம் பெற்றுள்ள மற்றும் இடம் பெறாத பிரெய்லி புத்தகங்களை அம்மையங்கள் வழங்கும் என்றும், அம்மையங்களின் செயல்பாட்டை அதிகரிக்க உயர்அழுத்த பிரெய்லி அச்சுபொறியும், தகவல் வங்கியை உருவாக்குவதற்காக தனிநபர் கணினிக்கும் வழங்கப்பட்டுள்ளன என்றும், கற்றல் திறன் குறைந்த மாணவர்களுக்கு உதவும்வண்ணம் பல்ஊடகம் சார்ந்த கணினி உதவிப் பெட்டகமும் வழங்கப்படும் என துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

21. துறை மேற்கொள்ளவிருக்கும் பணிக்காக, குழு தனது மகிழ்ச்சியினை தெரிவித்துக் கொள்கிறது. சமுதாயத்தில் மாற்று திறனாளிகளின் முன்னேற்றம் மிகவும் முக்கியமானது ஒன்று என்பதால் துறை எண்ணியுள்ள பணிகளை விரைந்து முடிக்கப் பெற்று திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

22. அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அறிவியல் நகரம் சேர்ந்து பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து நூலகங்களையும் இணைத்து, இணையதளத்தின் மூலமாக, மாணவர்கள், புத்தகங்கள், பருவகால இதழ்கள், மேற்கோள் நூல்கள் போன்றவற்றை படிக்க வாய்ப்பளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

23. மாணவர்கள் பயன்பெறும் வகையில் துறை தூரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கையினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரை செய்கிறது.

VII. பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்சி திட்டங்கள்

24. பயிற்றுவிக்கும் திறன் தொடர்ந்து மேம்பாடடைந்தால் மட்டுமே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சிகளை மாணவர்களுக்கு கொண்டு சென்று, அறைகூவல்களை எதிர்கொள்ள தயார் செய்து, அவர்களை முழுமையான தொழில் வல்லுநர்களாக ஆக்க இயலும். பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் கற்றல் மற்றும் கற்பித்தல் திறனை தற்காலத்திற்கேற்ப மேம்படுத்திக் கொள்வதற்கு தேசிய தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம், 2012–13ம் கல்வியாண்டில் 1,430 பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

25. தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டு திட்டம் IIன் கீழ் ரூ.4.47 கோடி கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி செலவிடப்பட்டுள்ளது:–

(i) ஆய்வகங்கள் மற்றும் நூலகங்களை நவீனப்படுத்துவதற்கான உபகரணங்கள், இயந்திரங்கள், புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் வாங்கிய வகையில் செலவினம் ரூ.2.87 கோடி ஆகும்.

(ii) பொறியியலில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியினை தொடரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பொறியியல் முதுநிலை பட்டம் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6000/– வீதம் 192 பேருக்கும், பொறியியல் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.12000/– வீதம் 22 பேருக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்கென, ரூ.52.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(iii) ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கான மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்திய வகையில் செலவினம் ரூ.35.4 இலட்சம் ஆகும்.

(iv) இந்நிறுவனங்களில் பயிலும் நலிவுற்ற மாணவர்களின் கல்வி மற்றும் பன்முகத்திறன்களை மேம்படுத்த நடத்தப் பெறும் திட்டங்களுக்கான செலவினம் ரூ.6.4 இலட்சம் ஆகும்.

(v) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் மற்றும் தேசிய தரநிர்ணய வாரியம் ஆகியவற்றின் தர நிர்ணய சான்றிதழை பெறுதல் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் கல்வி சார்ந்த தன்னாட்சி தகுதியை பெறுதல் போன்ற நிறுவன மற்றும் கல்வி சார்ந்த சீர்திருத்தங்களை செயல்படுத்த செலவினம் ரூ.27 இலட்சம் ஆகும்.

(vi) கல்லூரி மற்றும் தொழிற்சாலைக்கிடையேயான தொடர்பு, நிறுவனம் சார்ந்த மேலாண்மை திறன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் கல்லூரி சார்ந்த ஆலோசனை நடவடிக்கைகளை அதிகப்படுத்துவதற்கான செலவின வகையில் ரூ.38 இலட்சம் ஆகும்.

VIII. உலகத்தரம் வாய்ந்த உயர் கல்வியை வழங்குதல்

26. (i) வேலை வாய்ப்பிற்கு ஆளுமைத்திறன், பேச்சுத்திறன், குழுப்பணித்திறன் போன்ற மென்திறன்களை மாணவர்களுக்கு கற்பிக்க மென்திறன் மையங்கள் பல்கலைக்கழகங்களில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில் நுட்பப் பயிற்சி மையம் மற்றும் பெண்களுக்கான தகவல் தொடர்பு தொழில் நுட்பத்துடன் கூடிய சுயவேலை வாய்ப்பு மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

27. மாற்றுத்திறனாளிகளுக்கான தகவல் தொடர்பு தொழிற்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் பெண்களுக்கான தகவல் தொடர்பு தொழிற்நுட்பத்துடன் கூடிய சுயவேலைவாய்ப்பு மையம் அமைப்பதற்கு துறை திட்டமிட்டபடி நடவடிக்கையை மேற்கொண்டு அமைக்கப்பெற வேண்டும் என்றும், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

IX. மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வெளிப்படுத்துதல்

28. "பொருட்கள் எவ்வாறு இயங்குகின்றன" என்ற காட்சிக்கூடம் (How things work Gallery), "ஆடைகள் குறித்த காட்சிக்கூடம்" (Textile Gallery). "இயல் அறிவியல் காட்சிக்கூடம்" (Physical Sciences Gallery) கேளிக்கை அறிவியல் காட்சிக்கூடம் (Fun Science Gallery) ஆகிய நான்கு காட்சிக்கூடங்களுடன், முப்பரிமாணத் திரையரங்கு (3D Theatre) மற்றும் அறிவியல் பூங்கா (Science Park) ஆகியவை கொண்ட மண்டல அறிவியல் மையம் ரூ.8.5 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த மண்டல அறிவியல் மையம், பொது மக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவரப்படவுள்ளது என்றும் துறை சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

29. துறை நிர்ணயித்த காலத்திற்குள் மேற்படி மையத்தினை அமைத்து அதன் முழு பயனைப் பெறுவதற்கு அப்பகுதியில் உள்ள கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு குறிப்பாக அரசு கல்லூரிகள் மற்றும் அரசு பள்ளிகளில் சரியான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது.

30. மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதப் பாடத்தின் மீது நிலவுகின்ற அச்சத்தினை நீக்கும்பொருட்டு, கேளிக்கை வழி கணிதம் கற்றல், அன்றாட வாழ்வில் கணிதத்தின் பயன்பாடு, தொழிற்சாலைகளில் கணிதம் போன்ற விவரங்கள் அடங்கிய இராமானுஜன் காட்சிக்கூடம் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, பெரியார் அறிவியல், தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இக்காட்சிக் கூடம் பொது மக்களின் பார்வைக்கு விரைவில் திறக்கப்படவுள்ளது என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

31. மேற்படி காட்சிக்கூடம் அமைக்கப்பெற்ற பின் துறைரீதியான நடவடிக்கையின் ஒரு பகுதியாக கல்லூரி கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியவர்களுக்கு காட்சிக் கூடம் குறித்த சிறு தகவல்களுடன் ஒரு சுற்றரிக்கையினை உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

32. ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதத்தின் மீது ஆர்வத்தினை அதிகரிக்கும் வகையில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நடமாடும் கணிதப் பேருந்து, பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவரப்படவுள்ளது என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

33. ஊரகப் பகுதியில் உள்ள மாணவர்கள் முழு பயன் பெற துறையின் அப்பகுதியின் மண்டல இணை இயக்குநர் அளவில் நடமாடும் கணினி பேருந்தின் வருகை குறித்து ஒரு காலவரையறை (Time Frame) நிர்ணயித்து அதனை போதிய கால அவகாசத்திற்கு முன் துறைரீதியாக சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

X. அரசு, அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி கல்லூரியில் கட்டண அமைப்பைச் சரி செய்தல்

34. அரசு, அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி கல்லூரியில் கட்டண அமைப்பைச் சரி செய்தல் குறித்து குழு அறிய விரும்புகிறது.

35. சமூகத்தின் அடித்தளத்திலிருந்து வரும் மாணவர்களின் மீதான அக்கறை மற்றும் நலனை கருத்தில் கொண்டும், அப்பிரிவைச் சார்ந்த மாணவர்கள் உயர்கல்வி தொடர்வதை ஊக்குவிக்கும் வகையிலும் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. அனைத்து அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. 2012–13ஆம் ஆண்டில் 1,54,003 மாணவர்கள் அரசுக் கல்லூரிகளிலும், 2,97,875 மாணவர்கள் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் இத்திட்டத்தால் பயன்பெற்றுள்ளனர் என்றும், அரசு கல்வியியல் கல்லூரிகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முதுகலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில், இதே பிரிவினர்களுக்கு இச்சலுகை, இளநிலை பட்டப்படிப்பு வரை அளிக்கப்படுகிறது என்றும், ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

XI .சமுதாயத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு சமூக பொருளாதார மேம்பாடு

36. சமுதாயத்தில் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்குவதன் மூலம் உள்ளடங்கிய சமூக பொருளாதாரம் மேம்பாடு, துறையால் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது. இதில் மாணவர்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது. இத்திட்டத்தின் வெற்றி இலக்கு (Success rate) குறித்து தெரிவிக்கவும் உயர்கல்வி சென்றடையாத பகுதிகளை உயர்கல்வி சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலும் தமிழகத்தின் ஊரகப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் உயர்கல்வி பெற்று அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார சூழலை மேம்படுத்துவதற்கு உரிய வேலை வாய்ப்புகளை பெறவேண்டும் என்ற நோக்குடன் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 2011 – 12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு கல்வி ஆண்டும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 2012 – 13 ஆம் ஆண்டில் ஒரு அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது. மேலும் இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகளும் பத்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் விரைவில் தொடங்கப்படவுள்ளன. 2013–14 ஆம் ஆண்டில் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இரண்டு பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர ஒரு அரசு பொறியியல் கல்லூரியும் ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போதுள்ள 19 விழுக்காடு மாணவர்கள் மொத்த சேர்க்கை விகிதம் மேலும் உயருமென கருதப்படுகிறது. இதன்மூலம் மாணவர்களின் சமூக பொருளாதார நிலை மேம்பட்டுள்ளது என்றும், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெளிநாடு சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளில் படிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது, குறிப்பாக

கிராமப்புறங்களில் உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பகுதிகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மேலும், நிர்வாகிகள், கல்வியாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களிடையே இத்திட்டம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

37. துறை மேற்படி நடைமுறையினை தொடர்ந்து பின்பற்றி வெற்றி இலக்கினை மேலும் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

38. 12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2012–17) அனைவருக்கும் உயர்கல்வியைக் கொண்டு செல்லுதல், சரிநிகர்மைக்கு வாய்ப்பளித்தல், இணக்கம் மற்றும் சரியான தரநிலை நிர்ணயம் செய்தல் போன்ற முக்கியமான குறிக்கோளைக் கொண்டு செயல்படுவதாக துறை தெரிவித்து தொடர் நடவடிக்கையாக 11 இடங்களில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளதாகவும், அக்கல்லூரிகளுக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குழு அறிகிறது அவற்றின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

39. இதற்கு பெரியார் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் அரூர் கல்லூரிக்கான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், நிலம் மாற்றம் தொடர்பாக வனத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வனத்துறையின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், பாப்பிரெட்டிபட்டி கல்லூரிக்கான நிலமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்நிலம், அறநிலையத்துறையைச் சார்ந்ததால் நிலம் மாற்றம் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், துறை சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

40. மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு கல்லூரிகள் நீங்கலாக, இதர கல்லூரிகள் அனைத்திற்கும், இடம் தேர்வு குறித்த கருத்துரு பரிசீலனையில் உள்ளதாகவும், துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

41. துறை தெரிவித்துள்ள கல்லூரிகள் அமைப்பதற்கான தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் துரித நடவடிக்கையினை மேற்கொண்டு விரைவில் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XII. கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

42. அரசு, அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்/ பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றின் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்றும், குழு அறிகிறது. துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்புகிறது.

43. 3.6.2011 ஆம் நாளிட்ட சிறப்பு திட்ட செயலாக்கத் துறையின் அரசாணை (நிலை) எண். 1 இல் தெரிவித்துள்ள கீழ்காணும் வழிமுறைகளின்படி, இலவச மடிக்கணினி அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

(i) இத்திட்டம் தொடங்கப்பெற்ற முதலாமாண்டில், அதாவது 2011–12 கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாம் மற்றும் மூன்றாமாண்டு பயிலும் மாணவர்களுக்கும், இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு பயிலும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கும், முதலாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் பலவகை தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கும் விலையில்லா மடிக்கணினி வழங்கப்படுகிறது என்றும்,

(ii) இத்திட்டத்தின் இரண்டாமாண்டில் அதாவது 2012 – 13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாமாண்டு பயிலும் மாணவர்களுக்கும் பொறியியற் கல்லூரிகளில் இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் மற்றும் மூன்றாமாண்டு பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது என்றும்,

(iii) இத்திட்டத்தின் மூன்றாமாண்டான 2013–14 முதல் முதலாமாண்டு பலவகை தொழில்நுட்பக் கல்வி மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேற்காணும் விளக்கத்தின்படி, முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கும் விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது என துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

44. மாணவர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினியை சரியான முறையில் பயன்படுத்தி மாணவர்கள் பயன்பெறுகிறார்களா என துறை சார்பாக மாதிரி ஆய்வு (Sample Survey) ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XIII. தொழில்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக்கட்டண விலக்கு

45. தொழிற்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக்கட்டண விலக்கு இந்தக் கல்வியாண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக குழு அறிகிறது. இத்திட்டம் குறித்த விவரத்தினை குழு விரிவாக அறிய விரும்பியது.

46. ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாகவும், 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் ஒற்றைச் சாளர முறை மூலம், அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், முதலாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு நேரடி சேர்க்கை பெற்ற மாணவர்களில் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளித்து அவர்களின் கல்விக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. 2011–12 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.280 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 78,904 மாணவ / மாணவிகள் பயன்பெற்றுள்ளனர். 2012–13–ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக அரசால் 478 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,48,064 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும், தமிழகத்தில் அகதிகள் முகாமில் தங்கி பொறியியல் பயிலும் மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும், துறை சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

47. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற நிபந்தனைகள் குறித்து பின்வருமாறு துறை தெரிவித்தது.

(i) 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல், பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த தொழிற்கல்வி பயிலும் மாணவ / மாணவிகளின் கல்விக் கட்டணம் (Tuition fee), செலவை மட்டுமே அரசு ஏற்கும். கல்விக் கட்டணம் என்பது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொழிற்கல்லூரிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தையும், சுயநிதி தொழிற்கல்லூரிகளுக்கு தனியார் சுயநிதிதொழிற்கல்லூரிகளில் கட்டண நிர்ணயத்திற்காக அமைக்கப்பட்ட ஒய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணத்தையும் மற்றும் பல்கலைக்கழகங்கள் நடத்தும் பாடப்பிரிவுகளுக்கு அப்பல்கலைக்கழகங்கள் நிர்ணயிக்கும் கட்டணத்தையும் குறிக்கும் என்றும்,

(ii) 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு நடத்தும் ஒற்றைச்சாளர முறையில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் பயிலவிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த, பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச்சார்ந்த முதல் பட்டதாரி மாணவர்களுக்கே இத்திட்டம் பொருந்தும் என்றும், ஏற்கனவே முந்தைய ஆண்டுகளில் சேர்க்கை பெற்று பயின்றுவரும் மாணவர்களுக்கு இத்திட்டம் பொருந்தாது என்றும்,

(iii) குடும்ப நபர்கள் என்பது, சம்பந்தப்பட்ட குடும்பத்திலுள்ள தந்தை, தாய், அவர்களின் பெற்றோர் மற்றும் மாணவன் / மாணவியின் உடன்பிறப்புகளைக் குறிக்கும் என்றும்,

(iv) இச்சலுகையினை பெற பயனாளியின் குடும்பத்தில் பட்டதாரிகளே இல்லை என்பதனை உறுதி செய்யும் வகையில் மாணவர் வசிக்கும் பகுதியின் வருவாய்த்துறையின் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தகுதிக்குக் குறையாத அலுவலரிடம் சான்றிதழ் பெற்று அளிக்க வேண்டும் என்றும்,

(v) மாணவர்கள் தொழிற்கல்வி சேர்க்கைக்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் பொழுது விண்ணப்பத்துடன் குடும்பத்தில் முதன் முதலாக பட்டப்படிப்புக்கும் மாணவர் என்ற சான்றிதழையும், உறுதிமொழிப் பத்திரத்தையும் அளிக்க வேண்டும் என்றும்,

(vi) சான்றிதழ்களை சரிபார்ப்பது, தவறான சான்றிதழ் நகல் அளிக்கும் மாணவர் மற்றும் பெற்றோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு, மாணவர் எந்தவகையான தொழிற்கல்வி பயில அனுமதிக்கப்பட்டாரோ அதனை அனுமதித்த அலுவலர் / அமைப்புதான் நடவடிக்கை தொடர வேண்டும் என்றும்,

(vii) ஒற்றைச்சாளர கலந்தாய்வில் கலந்துகொண்டு அரசு, அரசு உதவிபெறும், பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற குடும்பத்தின் முதல் பட்டதாரி மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் (Tuition fee) வசூலிக்கக் கூடாது என சம்பந்தப்பட்ட அரசு, அரசு உதவிபெறும் கல்லூரி முதல்வர்கள், பல்கலைக்கழக பதிவாளர்கள் மற்றும் தனியார் சுயநிதி தொழிற்கல்வி நிர்வாகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அம்மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை (Tuition Fee) அக்கல்வி நிறுவனம் அரசிடமிருந்து பெற, அக்கல்வி நிறுவனம் எந்த துறையின் கீழ் இயங்கி வருகிறதோ, அந்த துறையின் இயக்குநரகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றும்,

(viii) தமது குடும்பத்தில் பட்டதாரி எவரும் இல்லை என மேற்குறிப்பிட்டுள்ள சான்றிதழுடன் மாணவனும் / மாணவியும் அவரது பெற்றோரும் சேர்ந்து கூட்டாக ஒரு உறுதிமொழி அளிக்கப்பட வேண்டும். அளிக்கப்பட்ட உறுதிமொழி சான்றிதழ் தவறானது என்று தெரியவந்தாலும், படிப்பினை முடித்த பின்னர் தெரிய வந்தாலும், தவறான தகவல் அளித்ததற்காக மாணவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் மூன்று மடங்காக சம்மந்தப்பட்ட மாணவரிடமிருந்தோ அல்லது அவரது பெற்றோரிடமிருந்தோ வருவாய் வசூல் சட்டத்தின் (Revenue Recovery Act) கீழ் திரும்ப வசூலிக்கப்படும். மேலும் இச்சலுகையினை பெறும் மாணவன் / மாணவியின் பெற்றோர்களிடம் உறுதி மொழி பெற அதற்கு ஏதுவான உறுதிமொழி வரைவுப் படிவம், வருவாய்த்துறையினரிடம் பெறவேண்டிய சான்றிதழ் படிவம் ஆகியவை தொழிற்கல்விக்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்துடன் அளிக்கப்படும்.

48. இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் முழு பயனைப் பெற துரைரீதியான சரிபார்த்தலை உரிய முறையில் மேற்கொண்டு மாணவர்கள் அந்த கல்வி ஆண்டிலேயே பயன்பெறும் வகையில் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XIV. செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள்

49. செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள் காட்சிவழி உரை வசதிகளை ஏற்படுத்த (Smart class rooms with multimedia support) 10 பல்கலைக்கழங்களில் ரூ. 20 லட்சம் வீதம் 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக குழு அறிகிறது. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை அறிய விரும்புகிறது.

50. 26.3.2012 ஆம் நாளிட்ட உயர்கல்வித் துறையின் அரசாணை (நிலை) எண் 38 ன் படி உயர்கல்வித் துறை, நாள் 26.3.2012ல் காட்சி வழி உரை வசதிகளை ஏற்படுத்த (Smart Class rooms with multimedia support) கீழ்க்காணும் 10 பல்கலைக்கழகங்களில் ரூ.20 லட்சம் வீதம் 2 கோடி செலவினம் ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
3. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
4. பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
6. அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
7. பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
8. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை
9. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்
10. திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

51. அரசாணையில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒரு காட்சி வழி உரை வசதியுடன் கூடிய செயல்திறன் வகுப்பறை மற்றும் மூன்று செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகளுக்குத் தேவைப்படும் உபகரணங்களுடன் அமைக்கப்பட ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும்,

White board with Instalock Screens
Short throw LCD Projector
LCD Projector
Podium
Documents Camera
Display System
Video Conferencing
Infrastructure Enhancement
Audio
Network (Active and Passive components)

52. பல்கலைக்கழகங்களில் ஆணையில் குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் வாங்குவதற்கு உரிய ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு அதன்படி Instalock LCD screen and white boards TV மற்றும் பிற உபகரணங்களுடன் காட்சிவழி உரை வசதியுடன் கூடிய வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு செயல்திறன் வகுப்பறைகளும் ஆவனத்தொகுப்பு காமிரா பொருத்தப்பட்டுள்ளதால் அதன் மூலம் ஆசிரியர் பாடம், படங்கள் போன்றவற்றை எளிதில் மடிக்கணினியில் பதிவு செய்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முழு அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என குழுவிற்கு துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

53. மேற்படி திட்டத்தின் கீழ் மாணவர்கள் பயன்பெறும் வகையில் துறை தேர்வு செய்யப்பட்டுள்ள பத்து பல்கலைக்கழகங்களிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் மாணவர்களுக்கான செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள் மற்றும் அவற்றிற்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உரிய முறைபடி விரைவில் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்றும், மாணவர்களின் செயல்பாடு குறித்து ஒவ்வொரு பல்கலைக் கழகங்களிலும் மாதிரி ஆய்வு (Sample Survey) ஒன்றினை மேற்கொண்டு அதன் அடிப்படையில் துறை கண்ட முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

54. மாணவர்களை லாபகரமான சுயவேலைவாய்ப்பு மற்றும் வருமானம் மிகுந்த வேலை வாய்ப்பு பயிற்சி அளிப்பதற்கு ஒரு பல்கலைக்கழகத்திற்கு ரூ.20 லட்சம் வீதம் 10 பல்கலைக்கழகங்களில் ரூ. 2 கோடி செலவில் தொழில் முனைதல் மற்றும் திறம் வளர்ச்சி திட்டங்களை உருவாக்கச் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் கால அளவு எவ்வளவு, மாணவர் செலுத்த வேண்டிய பயிற்சி கட்டணம், பயிற்சிக்குப்பின் மாணவர்களுக்கு, துறையினால் செய்யப்படும் உதவிகள் ஆகியவற்றை துறை தெரிவிக்கவும்.

55. 26.3.2012 ஆம் நாளிட்ட உயர்கல்வித் துறையின் அரசாணை (நிலை) எண் 40 ன் படி தொழில் முனைதல் மற்றும் திறம் வளர்ச்சி மையங்களை கீழ்காணும் 10 பல்கலைக்கழகங்களில் ரூ.20 லட்சம் வீதம் 2 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
3. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
4. பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
6. அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
7. பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
8. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை
9. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்
10. திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

56. மேலும் அவ்வரசாணையில் கீழ்காணும் திறன்களில் Apparel Enrichment, Medical Transcription, Office Management, Spoken English and Personality Development, Tailoring and Dress Making, Tally 9.1, Web Design, Embedded System Design, Animation & Graphics, Fashion Designing, Instrumental Music (Key Board and Guitar), Photography and Videography, Travel and Tourism Management, Visual Editing ஆகியவற்றில் பயிற்சி அளிக்க ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒரு பயிற்சி அறையுடன் LCD, கணினி மற்றும் தளவாடங்கள் மற்றும் பயிற்சிக்கான புத்தகங்கள் வழங்கி பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. குறுகிய பயிற்சி வகுப்புகள் மூன்று மாதம் அல்லது ஆறு மாத சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகளாக நடத்தப்பட ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்களுக்கும் பயன் பெறும் வகையில் Workshop மற்றும் தொழில்சார் மாநாடுகளில் பங்குகொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் பட்டம் பெறும்போது வேலைவாய்ப்பினை பெறுவதற்கும் இத்திட்டம் ஏதுவாக அமையும்.

57. மேற்காணும் ஆணைகளின்படி பல்கலைக்கழகங்களால் MSME, DIC,TIC,THADCO,NABARD,KVIC போன்ற அரசு தொழில்சார் நிறுவனங்களுடன் Workshop மற்றும் தொழில்சார் மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முழு அளவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன என துறை சார்பாக குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

58. திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த மையங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையும் மற்றும் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும், விரிவான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

59. அரசு மகளிர் காயிதே மில்லத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆசிரியர்களுக்கு தகவல் தொழில் நுட்ப திறன்களைப் பெறும் வகையில் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட பயிற்சிகளின் விவரங்கள் குறித்து குழு அறிய விரும்பியது.

60. 10.4.2012 ஆம் நாளிட்ட உயர்கல்வித் துறையின் அரசாணை (1டி) எண் 81 ன் படி பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் காயிதே மில்லத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் மைக்ரோ சாட்ப் நிறுவனத்தின் மூலம் தகவல் தொழில்நுட்ப திறன்களைப் பெற அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டது என்றும், மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் கோரிக்கையினை ஏற்று 2012–ம் ஆண்டு ஜூன் 21 முதல் 30 வரை 10 நாட்கள் இப்பயிற்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது என துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

61. துறை தெரிவித்துள்ள நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும், அளிக்கப்படும் பயிற்சி குறித்தும் அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

62. வெளிநாடுகளில் இருந்து பன்னாட்டு பயிற்சி பெற்ற நிபுணர்கள் மற்றும் நம் நாட்டில் இருக்கக்கூடிய சிறந்த பேராசிரியர்களிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டு பாடத்திட்ட வளர்ச்சி மையம் (Curriculum Development Cell) உருவாக்கும் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த பல்கலைக்கழகம் ஒன்றுக்கு ரூ. 1 கோடி வீதமாக 10 பல்கலைக்கழங்களுக்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என குழு அறிகிறது. இத்திட்டம் குறித்து குழு விவரங்களை அறிய விரும்புகிறது.

63. 26.3.2012 ஆம் நாளிட்ட உயர்கல்வித் துறையின் அரசாணை எண்.42 –ன் படி தொழில் மற்றும் பிற வணிக நிறுவனங்கள் விரும்பும் தேவைக்கேற்ற பணித்திறன் கொண்டவர்களை உலகத் தரத்திற்கு இணையாக உருவாக்க ஏதுவான பாடத்திட்டங்களை மறுசீரமைக்கும் பொருட்டு கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களில் ரூ.10 கோடி செலவில் பாடத்திட்ட வளர்ச்சி மையங்கள் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

1.சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
2.மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
3.மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
4. பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
6. அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
7. பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
8. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை
9. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்
10. திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

64. மேலும் அவ்வரசாணையில் Biological and Bio-technological Sciences, Nano Sciences and Technology, Mathematical Sciences, Physical Sciences, Chemical Sciences, Computer Science and Information Technology, Managerial and Business Sciences, Social Sciences, Indian Languages, Foreign Languages ஆகிய 10 பாடப்பிரிவுகளில் உலகத்தரம் மிக்க பாடத்திட்ட வளர்ச்சி மையத்தினை தேவையான உபகரண வசதிகளுடன் அமைப்பதற்கும் இந்தியா மற்றும் வெளிநாட்டு பாடத்திட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து தற்போதுள்ள பாடத்திட்டங்களை கற்பித்தலுக்கு உபயோகமாகும் வகையில் தரம் மிக்கதாக வடிவமைத்து செயல்படுத்த ஆய்வு முறைகள், Workshop நடத்தி கற்றல் modules மற்றும் பாடப்புத்தகங்களை தொழில்திறனை வளர்க்கும் அடிப்படையில் சிறந்த முறையில் தயாரித்து வழங்க இம்மையம் செயல்பட ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி மேற்கண்ட பல்கலைக்கழகங்களில் பாடத்திட்ட வளர்ச்சி மையம் செயல்பட இயக்குநர் ஒருவர் பணியமர்த்தப்பட்டு மையத்தின் மூலம் சிறப்பு வலைதளம் வழியாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலிருந்து தேவையான பாடத்திட்ட பொருள்களை பெற்று கருத்தரங்கு (Workshop) நடத்தி பாடத்திட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து உலகத்தரம் மிக்க பாடத்திட்டங்களை உருவாக்கவும் இத்திட்டம் முழு அளவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டுள்ளன என்றும், துறை சார்பாக குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

65. மையம் அமைப்பதற்கான நோக்கத்தின் முழு வெற்றியினைப் பெற மையத்தின் இயக்குநர், அதன் செயல்பாட்டை கண்காணித்து அவ்வப்போது ஆய்வினை மேற் கொள்ள வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது.

XV இலவச கல்வித் திட்டம்

66. இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் சலுகை பெற நிபந்தனைகள் குறித்தும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் கட்டணம் செலுத்திய பின்னர் மாணவர்களுக்கு திரும்பக் கொடுக்கப்படுகிறதா அல்லது கல்லூரியில் அனுமதிக்கும் போதே கொடுக்கப்படுகிறதா என குழு அறிய விரும்பியது.

67. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொருத்தவரை முதுநிலை பட்டப்படிப்பு வரை இலவச கல்வி வழங்கப்படுகிறது. அரசு உதவி பெறும் கல்லூரிகளை பொருத்தவரை இளநிலை பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது என்றும், அரசு கல்வியியல் கல்லூரிகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முதுகலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில், இதே பிரிவினர்களுக்கு இச்சலுகை, இளநிலை பட்டப்படிப்பு வரை அளிக்கப்படுகிறது என்றும் குழுவிற்கு துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

68. மேலும், மூன்றாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகளுக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையால் இலவச கல்வித் உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், தற்போது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியர்களுக்கு இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

69. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைப் பொருத்தவரை அப்பிரிவினர் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணங்கள் மத்திய அரசு திட்டத்தின் கீழ் அந்தந்த மாணவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. இத்தொகை மாணவர்களால் சிறப்புக் கட்டணமாக செலுத்தப்படுகிறது என குழுவிற்கு துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

70. மாணவர்களின் கல்வி பாதிக்காத வண்ணம் அவர்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை சம்பந்தப்பட்ட துறைகள் குறித்த காலத்திற்குள் வழங்கினால் மட்டுமே திட்டத்தின் கீழ் மாணவர்கள் முழு பயனை பெற முடியும் என்பதால், சம்பந்தப்பட்ட துறைகள் துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XVI. இந்திய ஆட்சிப்பணி மற்றும் இதர பணிகளுக்கான தேர்விற்கு பயிற்சி வழங்குதல்

71. இந்திய ஆட்சிப்பணி / இந்தியக் காவல் பணித் தேர்வுகளில் பங்குபெறும் மகளிருக்கென, சென்னை இராணிமேரி கல்லூரி மற்றும் மதுரை மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆகியவைகளில் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது என்றும் இத்திட்டத்திற்காக ஆண்டு தோறும் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குழு அறிந்தது. இத்திட்டம் குறித்து மகளிருக்கு எவ்வாறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது என குழு அறிய விரும்பியது.

72. அகில இந்திய அளவில் நடைபெறும் அகில இந்திய குடிமைப்பணி மற்றும் இதர மத்திய அரசின் பணிகளுக்கான தேர்வுகளில் பெண்கள் பங்குபெற்று பயன் பெறும் பொருட்டு சென்னை, இராணிமேரிக் கல்லூரி மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகிய இரு அரசு மகளிர் கல்லூரிகளிலும் 2000–01 ஆண்டிலிருந்து பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு தகுதியான மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுவருகின்றன. 2012–13ஆம் ஆண்டில் 57 மாணவியர் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர் என குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

73. இப்பயிற்சியை சில முன்னாள் ஐ.ஏ.எஸ்/ஐ.பி.எஸ். அதிகாரிகள் சம்மந்தப்பட்ட துறை பயிற்றுநர்கள், பேராசிரியர்கள் மற்றும் சென்னையில் நடைபெறும் ஐ.ஏ.எஸ்/ஐ.பி.எஸ். பயிற்சி நிறுவனத்திடமிருந்து வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன என துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

74. எனினும், குழு மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டபோது, கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவியர்களுக்கு இத்தகைய பயிற்சி நடத்தப்படுவதாக எத்தகைய விழிப்புணர்வும் இல்லையென அறிந்தது. இதற்கு துறை சரியான முறையில் மாணவியர்களுக்கு தெரிவிக்க நடவடிக்கையினை மேற்கொள்ளவில்லை என குழு கருதுகிறது.

75. இதற்கு 26.4.2013 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் துறையின் அரசு கூடுதல் செயலர் அவர்கள் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவியர்களுக்கு துறையின் மண்டல இணை இயக்குநர் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கையினை மேற்கொள்ளப்படும் என குழுவிற்கு தெரிவித்தார்.

76. கல்லூரி மாணவியர்களுக்கான சிறப்பு பயிற்சி திட்டம் என்பதால் துறை தெரிவித்தவாறு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கபெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XVII . பட்டப்படிப்புடன், பட்டய/ சான்றிதழ் படிப்புகளை பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகளில் உருவாக்குதல்

77. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பட்டப்படிப்பு மாணவர்கள் பயன் பெறும் பொருட்டு அவர்கள் பட்டப்படிப்புடன், பட்டய/ சான்றிதழ் படிப்புகளை (Add on course) பல்வகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் வகையில் உருவாக்கப்பட்ட திட்டத்தின் செயல்பாடு எவ்வாறு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பயிற்சிகளின் விவரம், கால அளவு மற்றும் இந்த ஆண்டு பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை குறித்து குழு அறிய விரும்புகிறது.

78. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டு கால பட்டய/சான்றிதழ் படிப்புகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கு நடத்தப்படும் இப்படிப்புகள் எந்தவித கட்டாயமும் இன்றி மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன என்றும், ஆறு மாத கால படிப்பு பிரிவுகளுக்கு மொத்தம் 96 மணி நேரமும், ஓராண்டில் படிப்புப் பிரிவுகளுக்கு மொத்தம் 192 மணி நேரமும் பாடங்கள் நடத்தப்பட்டு இறுதியில் தொழில்நுட்பக் கல்வி வாரியத்தால் தேர்வு நடத்தப்படும். ஆறு மாத பயிற்சிக்கு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களிலும் ஓராண்டு பயிற்சிக்கு ஏப்ரல் மாதத்திலும் தேர்வுகள் நடத்தப்படும் என்றும் துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

79. மேலும், ஆறு மாத படிப்பிற்கு ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் படிப்புக்கட்டணமாக ரூ. 1500/–ம் மற்றும் 12 மாத (ஒரு வருடம்) படிப்பிற்கு ரூ.3000/–ம் வசூலிக்கப்படும். கட்டணத்தை இரண்டு அல்லது மூன்று தவணைகளில் செலுத்தலாம். தேர்வு கட்டணம் மொத்தம் ரூ.130 /– என்றும், அவை கீழ்கண்டவாறு வசூலிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ஒரு பாடத்திட்டத்திற்கான தேர்வு கட்டணம்	–	ரூ.50
மதிப்பீடு பட்டியலுக்கான கட்டணம்	–	ரூ.30
சான்றிதழுக்கான கட்டணம்	–	ரூ.50

80. இப்படிப்பு குறித்த இறுதி மதிப்பீடு தொழில் நுட்ப கல்வி இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படும் என்றும், இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள சில பாடப்பிரிவுகள் பின்வருமாறு:–

1) Multimedia, 2) Tally, 3) A.C. Technology, 4) Hardware Servicing.

5) Domestic Wiring 6) Net Working, 7) Web Designing and Animation.

8) E-Commerce, 9) Driving (Light and Heavy Vehicles), 10) Beautician,

11) Garment Quality Inspection and Export Merchandising, 12) Communication Skill,

13) Office Automation, 14) Survey 15) D.T.P.

இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய ஏழை மாணவ/மாணவியர் தாங்கள் பட்டப் படிப்பு பயிலும் காலத்திலேயே, மேற்குறித்த பட்டய/சான்றிதழ் படிப்புகளை பயிலுவதன்மூலம் தங்களுடைய வேலைவாய்ப்பினை பெருக்கிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 2009–2013 வரை 2588 மாணவ / மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

81. துறை தெரிவித்துள்ள பாடப்பிரிவுகள் நீங்கலாக, இதர பாடப் பிரிவுகளை கண்டறிந்து அவற்றையும் பயிற்சி பட்டியலில் சேர்த்து மாணவர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XVIII. பொது மற்றும் தனியாருடன் இணைந்து புதிய இந்திய தகவல் தொழில்நுட்ப கழகம் அமைத்தல்

82. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பொது மற்றும் தனியாருடன் இணைந்து (Public Private Partnership Mode) புதிய இந்திய தகவல் தொழில் நுட்பக் கழகம் (IIIT) நிறுவுதல் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்புகிறது.

83. 2013–14ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் வட்டத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தை நிறுவப்பட உள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் தகவல் தொழில் நுட்பம் மற்றும் அது சம்பந்தமான துறைகளில் தேவையான மனித ஆற்றல் திறனை வளர்த்தலே ஆகும். இந்நிறுவனமானது இந்திய அரசு மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படும். இந்திட்டத்திற்கான மொத்த மூலதன செலவினம் 50 : 35 : 15 (ரூ.64.00 கோடி – இந்திய அரசு, ரூ.44.80 கோடி மாநில அரசு – ரூ.19.20 கோடி – தொழில் நிறுவனங்கள்) என்ற விகிதாசாரத்தில் ரூ.128.00 கோடி ஆகும். இந்நிறுவனத்தை அமைக்க, ஸ்ரீரங்கம் வட்டத்தில் சேதுராப்பட்டி கிராமத்தில் 56.37 ஏக்கர் அளவிலான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் அமைக்க கண்டறியப்பட்டுள்ள இடத்தில் கட்டிடப் பணிகள் அனைத்தும் முடித்து அந்த இடத்தில் நிறுவனம் தொடங்க சிறிது காலம் ஆகும் என்பதால் 2013–14ஆம் கல்வியாண்டில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பாரதிதாசன் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் தற்காலிகமாக தொடங்கி செயல்படுத்தப்பட 21.3.2013 ஆம் நாளிட்ட உயர்கல்வித் துறையின் அரசாணை (நிலை) எண் 46 ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும், 4.4.2013ஆம் நாளிட்ட கடிதத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்விக் குழுமம் அமைய சேதுராப்பட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலத்திற்கு, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் இயக்குநர் தனது இசைவினை தெரிவித்துள்ளார் என துறை சார்பாக குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

84. தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் இயக்குநர் தனது இசைவினை தெரிவித்துள்ளதால், அவ்விடத்தில் மேற்படி மையத்தை அமைக்க துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் பரிந்துரை செய்கிறது.

XIX. புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்குதல்

85. தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிய அரசு பொறியியல் கல்லூரி அமைத்தல் பணிகளுக்காக நான்காண்டுகளுக்கு ரூ. 9364.94 லட்சம் முதலீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2012–13 ஆம் ஆண்டில் கட்டிடம் கட்டுதல் (ரூ. 2000.98 லட்சம்) உபகரணங்கள் வாங்குதல் (ரூ.74.00 லட்சம்) மற்றும் பணியாளர் ஊதியம் (ரூ. 448.55 லட்சம்) போன்றவற்றிற்காக ரூ.2523.53 லட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது என தெரிகிறது. கட்டிட பணிகள் துவங்கப்பட்டதா, என்றும் இதர பணிகளின் நிலை குறித்தும் குழு அறிய விரும்புகிறது.

86. தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிய அரசு பொறியியல் கல்லூரியின் கட்டுமானப் பணி 10.3.2013 அன்று துவங்கப்பட்டது. பணிமனை மற்றும் பிரதான கட்டிடமான நிர்வாகக் கட்டிடம் கட்டும் பணிகளுக்குரிய கடைக்கால் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும், துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

87. மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லூரிக்கான கட்டிடப் பணிகள் அனைத்தையும் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

88. மத்திய நிதியுதவி திட்டத்தின் கீழ் தருமபுரி, கரூர், பெரம்பலூர், தேனி, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் ஏழு புதிய பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளான என்றும், மதுரையில் துவங்கப்பட்டுள்ள பலவகை தொழில் நுட்பக் கல்லூரிக்கு உபகாணங்கள் வாங்குவதற்காக ரூ.14.67 கோடி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது என குழு அறிகிறது. மேற்படி கல்லூரிகள் அமைப்பது மற்றும் உபகரணங்கள் வாங்குவது குறித்து குழு அறிய விரும்புகிறது.

89. மத்திய அரசு நிதியுதவி திட்டத்தின் கீழ் தேனி, திருவாரூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தர்மபுரி, கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிக்கு ரூ.2.00 கோடி ஒப்பளிக்கப்பட்டு ஆக மொத்தம் ரூ.14.00 கோடி ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.7, நாள் 19.01.2010–இல் ஆணையிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அக்கல்லூரிகளுக்கு 2010–2011 ஆம் ஆண்டு (முதலாம் ஆண்டு)–க்கான 13 ஆசிரியர் மற்றும் 32 ஆசிரியரல்லா பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ஐந்து துறைகளில் 300 மாணவர்கள் சேருவதற்கு ஏதுவாக ஆணைகள் வெளியிடப்பட்டது. அரசாணை (நிலை) எண்.141, உயர்கல்வி (பி) துறை, நாள் 8.6.2010, அரசாணை (நிலை) எண்.139, உயர்கல்வி (பி) துறை, நாள் 18.7.2012–ல் மேற்கூறிய 7 அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு இரண்டாம் ஆண்டுக்கான பணியாளர்கள் அதாவது ஒவ்வொரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு 53 பணியிடங்கள் வீதம் 7 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு 371 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அரசாணை (3டி) எண்.10, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 31.3.2013–ல் மூன்றாம் ஆண்டிற்கு (2012–2013) ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு 15 ஆசிரியர் பதவிகள் வீதம் 105 பதவியிடங்களும் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அரசாணை (நிலை) எண்.138, உயர்கல்வி (பி2) துறை, நாள் 18.7.2012–ல் மேலூர், அம்பலக்காரன்பட்டி, மதுரை மாவட்டத்தில் இயங்கும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு 39 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

90. மேலும், அரசாணை (நிலை) எண்.196, உயர்கல்வி (பி2) துறை, நாள் 12.10.2012–ல் 7 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கருவிகள், அறைகலன்கள், புத்தகங்கள், கணினி ஆகியவற்றை மூன்றாவது ஆண்டு (2012–2013)–க்கு கொள்முதல் செய்வதற்கு ரூ.12,12,67,139/– ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

91. மேற்கூறிய 7 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மொத்தம் ரூ.26.13 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அக்கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை மற்றும் மாணவர் சேர்க்கை விவரம் பின்வருமாறு :–

பயிலகத்தின் பெயர்	ஒப்பளிப்பு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, தர்மபுரி	300	274
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கரூர்	300	282
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, பெரம்பலூர்	300	290
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, தேனி	300	252
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, திருவண்ணாமலை	300	292
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, திருவாரூர்	300	257
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, விழுப்புரம்	300	281
அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, மேலூர்	249	236

92. மாணவர்களின் நலன் கருதி வெவ்வேறு அரசாணைகளின் வாயிலாக ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புவதற்கு துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது.

XX. மத்திய அரசு நிதி உதவியுடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் அமைத்தல்

93. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 19 அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளும், 5 சுயநிதி பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் தலா ரூ. 1 கோடி மதிப்பீட்டில் மகளிர் விடுதிகள் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என குழு அறிகிறது. அக்கல்லூரிகளின் பட்டியல், பணியின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

94. இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தலா 1 கோடி மதிப்பீட்டில் மகளிர் விடுதிகள் கட்டுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 19 அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் 5 அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளின் பட்டியல், பணியின் தற்போதைய நிலை குறித்த பட்டியல் துறை சார்பாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

95. பட்டியலை பார்வையிட்ட குழு பின்வரும் கல்லூரிகளில் எத்தகைய பணிகளையும் மேற்கொள்ளப்படவில்லை என வியப்படைந்தது.

அரசு கல்லூரிகள்

1. அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, உதகை

6 முறை ஒப்பந்தபுள்ளி கோரியும், இறுதி செய்யப்படவில்லை என்றும், ஒப்பந்தப்புள்ளி மீண்டும் கோரப்பட்டுள்ளது என்றும், தெரிகிறது.

2. அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, அறந்தாங்கி

4 முறை ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யப்படாமல் 5வது முறையாக ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் தற்போது நடைபெறுகிறது என்றும் தெரிகிறது.

3. அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்

ஒப்பந்தப்புள்ளி இதுநாள் வரையில் இறுதி செய்யப்படவில்லை என்றும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

4. அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, புரசைவாக்கம், சென்னை

பணிகளை மேற்கொள்ள இயந்திரங்களை கொண்டு செல்ல பாதை சரியாக இல்லாத காரணத்தால், கட்டுமான நிறுவனத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், இயந்திரங்கள் எடுத்துச் செல்ல பாதை வசதிக்காக சென்னை மாநகராட்சியில் அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும், பணிகளை மேற்கொள்ள மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

96. குழு, அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, உதகையில் ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்வதில் உள்ள இடர்பாடுகளைக் களைந்தும், தேவையிருப்பின் அரசின் விதி தளர்வு பெற்று விரைவில் ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

97. குழு, அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்பத்தூரின் ஒப்பந்தப்புள்ளியினை விரைவில் இறுதி செய்து பணிகள் துவங்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

98. அரசினர் தொழிற்நுட்பக் கல்லூரி, புரசைவாக்கம், சென்னை, கட்டுமான நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வதற்கு முன்கல்லூரி நிர்வாகம் பணிகளை மேற்கொள்ள இயலுமா என சரியானமுறையில் ஆய்வினை மேற்கொள்ளவில்லை என்றும், ஆய்வு செய்திருந்தால் கால தாமதத்தை தவிர்த்திருக்கலாம் என குழு கருதுகிறது. மத்திய அரசின் நிதி பெற்றும், பயன்படுத்தப்படாமல் உள்ளது குறித்து குழு தனது வருத்தத்தினை தெரிவிக்கின்றது.

99. எனவே, கல்லூரி நிர்வாகம் சென்னை மாநகராட்சியின் அனுமதியினை விரைவில் பெறுவதற்கு துரிதமாக நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் அனுமதி பெற்ற பின் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளியினை கோரியும், இறுதி செய்தும்பணிகளை துவங்கி குறித்த காலத்திற்குள் முடிக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து, விரிவான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

அரசு உதவி பெறும் கல்லூரிகள்

100. திருநெல்வேலி, சங்கர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி முதல் தவணையான ரூ.20 இலட்சம் பெறப்பட்ட பின்னரும் நீண்ட காலமாக நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என்றும் குழு அறிகிறது. தற்போது விடுதிக்கான வரைபடம் உள்ளாட்சி அமைப்பிற்கு அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. துறை சார்பாக, கல்லூரி முதல்வரின் விளக்கத்தினை கோரப்பட்டதாகவும் குழு அறிகிறது. மேலும், மத்திய அரசு மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தனது அறிக்கையில் கல்லூரியிடமிருந்து எத்தகைய ஏற்புத் தன்மை (Response) இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குழு அறிகிறது. மத்திய அரசின் நிதி பெற்றும் பயன்படுத்தப்படாமல் உள்ளதை எண்ணி குழு வருந்தியது. குழு இதற்காக துறைக்கும் சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகத்திற்கும் தனது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறது.

101. எனவே, துறை சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகத்திற்கு ஒரு காலவரையறையினை நிர்ணயித்து விடுதிக்கான வரைபடத்திற்கு உள்ளாட்சி அமைப்பிடமிருந்து அனுமதி பெற்று பணிகள் துவங்கப்பெற வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

102. துறை நிர்ணயித்த காலத்திற்குள், கல்லூரி நிர்வாகம், பணிகளை துவங்கப்பெறவில்லை என்றால் வழங்கப்பட்ட தொகையினை அரசாங்க விதிகளின்படி சம்பந்தப்பட்ட கல்லூரியிடம் பிடித்தம் செய்து அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

103. நீலகிரி மாவட்டம், கோத்தகிரி என்.பி.ஏ. நூற்றாண்டு பலவகை தொழில்நுட்ப கல்லூரி முதல் தவணையான ரூ.20 இலட்சம் பெறப்பட்ட பின்னர் 31.3.2011 வரை எத்தகைய செலவினமும் செய்யாமல் 9.11.2012 அன்று விடுதிக்கான கட்டுமானப் பணியினை பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளுமாறு கல்லூரி முதல்வர் கோரியுள்ளார் என்றும், துறை சம்பந்தப்பட்ட கல்லூரியின் முதல்வரிடம் விளக்கத்தினை கேட்கப்பட்டுள்ளதாக குழு அறிகிறது.

104. கல்லூரி நீண்டநாட்களாக முதல் தவணை பெற்று பணிகளை துவங்கப்பெறாமல் உள்ளதற்கு குழு தனது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறது.

105. துறை, கல்லூரிக்கு ஒரு காலவரையரையினை நிரணயித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு விடுதிக்கான கட்டடத்தை முடிக்கப்பெற வேண்டும் என்றும், கல்லூரி நிர்ணயித்த காலகெடுவிற்குள் முடிக்கப்பெறவில்லையென்றால் துறை அரசு விதிகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்ட தொகையினை பிடித்தம் செய்து அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

106. காஞ்சீபுரம், பக்தவச்சலம், பலவகை தொழில்நுட்ப கல்லூரி விடுதியினை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளாமல் தனியார் நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொண்டதற்காக, விடுதியினை ஆய்வு செய்ய குழு ஒள்றினை அமைக்கப்பட்டதாக குழு அறிகிறது.

107. குழு, மேற்கண்ட ஆய்வின்போது, குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், அவற்றின் மீது துறை உரிய முறையில் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

108. சேலம், தியாகராஜர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரியில், நாடு முழுவதிலும் உள்ள முன்னணி நவீன தொழில் நுட்ப வளர்ச்சியடைந்த இலாபகரமான நிறுவனங்களுக்கு ஈடாக, மாணவர்களின்/ பொதுமக்களின்/ பணியாளர்களின் அறிவு மற்றும் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த உயர் திறன் பயிற்சி மையம் நிறுவப்பட்டு ரூ.676 லட்சம் செலவில் பயிற்சிகள் வழிகாட்டுதலின் படி அமைக்கப்படுவது குறித்து குழு அறிய விரும்பியது.

109. சேலம், தியாகராஜர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரியில், நாடு முழுவதிலும் உள்ள முன்னணி நவீன தொழில் நுட்ப வளர்ச்சியடைந்த இலாபகரமான நிறுவனங்களுக்கு ஈடாக, மாணவர்களின்/ பொதுமக்களின்/ பணியாளர்களின் அறிவு மற்றும் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த உயர் திறன் பயிற்சி மையம் அமைக்க, மத்திய அரசின் திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற தொழில் நுட்பக் கல்வி ஆணையரால் கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, பரிசீலனையில் உள்ளது என துறை சார்பாக குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

110. மத்திய அரசின் பரிசீலனையில் உள்ள கருத்துருவிற்கு விரைவாக **ஒப்புதல்** பெற்று **ஒருங்கிணைந்த** உயர்திறன் பயிற்சி மையம் அமைப்பதற்கு **துரித** நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXI . தொன்மைவாய்ந்த வரலாற்று சின்னங்களை பராமரித்தல்

111. தொழில்நுட்ப இயக்குநரகத்தின் கட்டுமானப் பிரிவு தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் கட்டிடங்களை பட்டியலிட்டு அவற்றை பாதுகாத்து பராமரித்து புதுப்பொலிவு கொடுக்கும் பணியினை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இப்பணிக்கு இந்திய தொல்லியல்துறை வல்லுநர்கள் மற்றும் மாநில தொல்லியல் துறை வல்லுநர்கள் பயன்படுத்தப்படுவார்கள் எனவும் குழு அறிகிறது. மேலும் பராமரிக்கப்படவேண்டிய கட்டிடங்கள் குறித்தும் குழு அறிய விரும்புகிறது.

112. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுமான பிரிவின் கீழ் தொன்மை வாய்ந்த கட்டிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்றும், அக்கட்டிடங்களின் பட்டியல், பணிகளுக்கான மதிப்பீடு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:–

113. சென்னை, பாரதி மகளிர் கல்லூரியின் முதல் கட்டிடம் முற்றிலும் சிதலமடைந்த நிலையில் உள்ளது என்றும், கழிவு அறிக்கை தயாரிக்கப்பட்டு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் குறிப்புரையுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றும் குழுவிற்கு துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

114. மாணவர்களின் நலன் கருதி பெறப்பட்ட குறிப்புரையின் மீது **உரிய** நடவடிக்கையினை மேற்கொண்டு புதிய **கட்டிடம்** கட்டுவதற்கு துறை **விரைவாக** நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. **இதன்** தொடர் நடவடிக்கை குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற **வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.**

115. சென்னை, இராணிமேரிக் கல்லூரியிலுள்ள பெண்ட்லாந்து இல்லம், ஸ்டோன் இல்லம், மற்றும் ஜெய்பூர் இல்லம் ஆகிய கட்டிடங்களை புனரமைப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாக துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

116. மேற்படி 3 கட்டிடங்களுக்கான மதிப்பீடுகளை விரைவாக தயாரித்து பரிசீலனை செய்து புனரமைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

117. மேலும், சென்னை இராணிமேரிக் கல்லூரி வளாகத்திலேயே இயங்கி வரும் பீச் இல்லம் மற்றும் மிலிடரி பங்களா ஆகிய கட்டிடங்களும் முற்றிலும் சிதலடைந்த நிலையில் உள்ளன என்றும், அவற்றிற்கான கழிவு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

118. கழிவு அறிக்கையினை விரைவாக தயாரித்து, தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

119. சென்னை, மாநில கல்லூரி வளாகத்தில் உள்ள முதன்மைக் கட்டிடத்தின் பகுதிக் கட்டிடம் புனரமைக்கப்பட்டு மீதிப் பகுதி தொன்மை கட்டிடக் குழுவின் பரிந்துரை பெறப்பட்டபின் மதிப்பீடு தயாரிக்கப்படும் என்றும், கல்லூரி தற்போது தற்காலிக பாதுகாப்பு வசதியுடன் இயங்கி வருவதாகவும் துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

120. மாணவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை முதன்மையாக கருத்தில் கொண்டு மீதிப்பகுதியினை புனரமைப்பதற்கான மதிப்பீட்டினை விரைவில் தயாரிக்கப்பட்டு, பணிகளை உடன் துவங்கப்பட்டு முடிக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

121. விக்டோரியா மாணவர்கள் விடுதிக் கட்டிடத்தின் ஒரு பகுதி சிதலமடைந்து உள்ளதால் மாணவர்களின் நலன் கருதி பயன்படுத்தப்படாமல் உள்ளது என்றும், அப்பகுதி புனரமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

122. சிதலமடைந்த கட்டிடத்தின் பகுதியினை புனரமைப்பதாற்கான மதிப்பீடுகளை உடன் தயாரித்து, ஒப்புதல் அளித்து, பணிகளை விரைவாக துவங்கி முடிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

123. சென்னை, கல்வியல் மேம்பாட்டு நிறுவனம், அரசினர் பயிற்சி வளாகத்திலுள்ள சில கட்டிடங்கள் முற்றிலும் சிதலமடைந்த நிலையில் உள்ளன என்றும் அவற்றை கழிவு செய்வதற்கான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக குழுவிற்கு துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

124. சிதலமடைந்த கட்டிடங்களை கழிவு செய்வதற்கான அறிக்கையினை உடன் தயாரித்து தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

125. கும்பகோணம், அரசு கலைக் கல்லூரி பழைய வேதியல், பௌதீகம், இந்திய கலாச்சாரம், மணிகூண்டு கட்டிடத்தின் ஒரு பகுதி இயங்கி வருவதாகவும், அப்பகுதியினை புனரமைப்பதற்கான பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

126. மேற்படி கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பகுதி கட்டிடத்தினை பராமரிப்பதற்கான மதிப்பீட்டை விரைவில் தயாரித்து, ஒப்புதல் அளித்து, பணிகள் துவங்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

127. துறை அறிவித்துள்ள தகவலின்படி தொழில்நுட்ப இயக்குநரகத்தின் கட்டுமானப் பிரிவு கட்டுப்பாட்டில் உள்ள தொண்மைவாய்ந்த வரலாற்று சின்னங்களாக விளங்கும் கட்டிடங்களை சென்னை அரசு கவின் கல்லூரி நீங்கலாக, சில கட்டிடங்கள் கழிவு செய்யும் நிலையிலும் அல்லது புனரமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன என குழு அறிகிறது. எனவே, தொழில்நுட்ப இயக்குநரகத்தின் சார்பில் மேற்படி கட்டிடங்களை காலமுறை பராமரிப்பு (Periodical Maintenance) மேற்கொள்ளவில்லை என குழு அறிகிறது.

128. துறை வரலாற்று சின்னங்களாக உள்ள கட்டிடங்கள் என்பதால் தொழில்நுட்ப இயக்குநரகத்தின் மூலம் சிறப்பு இனமாக கருதி நிதி துறையினை கலந்து ஆலோசித்து கூடுதல் நிதியினைப் பெற்று நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

XXII. தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி மாநில மன்றத்தின் செயல்பாடு

129. தமிழ்நாடு, தொழில்நுட்பக் கல்வி மாநில மன்றத்தின் 2012–13 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு குறித்து குழு அறிய விரும்புகிறது.

130. மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை பேணவும், மேம்படுத்தவும் அதன் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்கான தொலைநோக்கு திட்டங்களை வகுத்திடவும் தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் தோற்றுவிக்கப்பட்டதாகவும், மாநில தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு தொலைநோக்குத் திட்டம் அனைத்து தொழில்நுட்ப நிறுவனங்களிலும் தரம் பேணுதல் மற்றும் மேம்பாடு, பாடத்திட்ட மேம்பாடு, தேர்வுமுறை சீரமைப்பு, தொழில்நுட்ப முக்கிய பாடப்பிரிவுகளின் ஆராய்ச்சிக்கு நிதி உதவும் நிறுவனங்களோடு சேர்ந்து ஆராய்ச்சியை முனைப்பாக்குதல், ஆசிரியர் புகுமுக மற்றும் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள், வேலை வாய்ப்பினை அதிகரித்தல், ஊரக ஏழைகட்கு தொழில் திறன் வளர்த்தல் போன்ற தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

131. பாட திட்ட மேம்பாடு, தேர்வு முறை சீரமைப்பு குறித்தும் மற்றும் மன்றத்தால் உயர்தொழில்நுட்பக் கொள்கை குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

132. இதன் தொடர்ச்சியாக மாநில தொழில்நுட்ப பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர்களுடன் கலந்துரையாடி, தர மேம்பாடு, தேர்வு சீரமைப்பு ஆகியவை மாணவர்கட்கு பயனளிக்கும் வகையில் அமல்படுத்தப்பட்டது என்றும், மாணவர்களிடையே ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த ஆராய்ச்சிகளுக்கு ரொக்க பரிசளிக்கும் திட்டங்கள் திட்டப்பட்டன. கல்வித்தர மேம்பாட்டிற்காக சிறந்த கல்லூரி முதல்வர், சிறந்த ஆராய்ச்சி அறிவியலாளர் போன்றோரை ஊக்குவிக்கும் வகையில் பரிசுத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பொறியியல் கல்வியில், வாஷிங்டன், சிட்னி, மற்றும் டப்ளின் உடன்படிக்கைகளின்படி தரநிர்ணய ஒப்புதல் வழங்குதலில் செய்யப்பட்ட மாற்றங்களை விளக்கும் வகையில் பன்னாட்டு மாநாடு ஒன்றினை இம்மன்றம் ஒருங்கிணைத்தது என்று துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

133. இம்மன்ற சட்டம் 2010ன் பிரிவு 10 (a) (d) ன்படி தொழில் நுட்பக் கல்வி மற்றும் ஆராய்ச்சி குறித்து அரசுக்கு, தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகட்கு வழிகாட்டு குறிப்புரைகள் வழங்க வேண்டும் என்பதால் இவ்வாண்டில் இம்மன்றத்தால், உயர்தொழில் நுட்ப கொள்கையை முடிவு செய்தல், 2012, நல்ஆளுகைக்கான தேசிய மன்றத்திற்கு ஒரு மையம் நிறுவுதல், திறன் மேம்படுத்துதல், தொழில் திறம் வளர்ப்பது, ஆசிரியர் மற்றும் கற்பித்தல் கொள்கை குறித்த தேசிய பணி, செயல்பாடுகள், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுகள் முறையில் முடிவுகள் கட்டமைப்பு ஆவண அமலாக்கம் போன்றவை குறித்து இம்மன்றம் குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டுள்ளது என துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

134. நல் ஆளுகைக்கான தேசிய மன்றத்திற்கு ஒரு மையம் நிறுவுவதற்கு துறை விரிவான நடவடிக்கையினை மேற்கொண்டு அமைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

135. திறன் மேம்படுதல், தொழில் திறன் வளர்ப்பது ஆசிரியர் மற்றும் கற்பித்தல், கொள்கை குறித்த தேசிய பணி, செயல்பாடுகள், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுகள் முறையில் முடிவுகள் கட்டமைப்பு ஆவண அமலாக்கம் போன்றவை குறித்து மன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXIII. தமிழ்வழி பயிலும் மாணவ/மாணவியர்க்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்

136. தமிழ் வழி பயிலும் மாணவ / மாணவியர்க்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 2012–13ஆம் நிதி ஆண்டில் ரூ.135 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குழு அறிகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பெறும் உதவித் தொகையினை உயர்த்துவதற்கான கருத்துரு ஏதேனும் அரசிடம் பரிசீலனையில் உள்ளதா என குழு அறிய விரும்புகிறது.

137. தமிழகத்திலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை மற்றும் இளமறிவியல் வகுப்புகளில் தமிழ் வழியில் பயிலும் முதல், இரண்டு மற்றும் மூன்றாமாண்டு பயிலும் மாணவ/மாணவிகளுக்கு ஆண்டொன்றுக்கு தலா ரூ. 400/– வீதம் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது என்றும், 2012–2013ஆம் ஆண்டில் அரசிடமிருந்து ரூ.1.35 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டு கல்லூரிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இத்தொகையில் ரூ.1,32,65,600/– செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்றும், இத்திட்டத்தின் மூலம் 33,164 மாணவ மாணவிகள் பயனடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

138. தமிழ்வழி ஊக்கத் தொகையினை உயர்த்தி வழங்கக் கோரி கல்லூரி முதல்வர்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டு கருத்துரு சமர்பிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும் துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

139. மாணவர்களின் நலன் கருதி, துறையின் பரிசீலனையில் உள்ள கருத்துருவிற்கு விரைவாக ஒப்புதல் அளித்து ஊக்கத்தொகையினை கணிசமான அளவு உயர்த்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXIV. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

140. 93 அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் உள்கட்டமைப்பு / அடிப்படை வசதிகள் மேம்படுத்த ரூ. 100/– கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள உயர்கல்வித் துறையின் அரசாணை நிலை எண். 198, நாள் 15.10.2012–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குழு அறிகிறது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் நடைபெறும் பணிகள் குறித்து குழு அறிய விரும்பியது. பணிமுடிவடையும் நாள் ஆகியவற்றை துறை இனம் வாரியாக தெரிவிக்கவும்.

141. 15.10.2012 ஆம் நாளிட்ட உயர்கல்வித் துறையின் அரசாணை (நிலை) எண் 198 ன்படி 69 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் பற்றிய விவரங்கள் அனைத்து அரசு கல்லூரிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 69 அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் மற்றும் மாணவர்களின் மேசைகள் , நாற்காலிகள் மற்றும் நவீன கரும்பலகைகள் ஆகியவற்றிற்கு ரூ.20 கோடி நிதி விரைவில் வழங்கப்படும் என்றும், அரசு கல்லூரிகளுக்கு எஞ்சிய உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்கு, ஒரு குழு அமைத்து, இக்கருத்துருக்களுக்கு குழுவின் ஒப்புதல் பெற்று, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்த விவரங்கள் பல்கலைக்கழகங்களிடம் கோரப்பட்டு, அவ்விவரங்கள் பெரும்பாலான பல்கலைக்கழகங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள பல்கலைக்கழகங்களிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

142. உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி அமைப்பதற்கான கோரிக்கைகள் வரப்பெறாத பல்கலைக்கழகங்களுக்கு விவரங்களை அனுப்புவதற்கு ஒரு காலவரையரையினை நிர்ணயித்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் தேவையான உள்கட்டமைப்பு/ அடிப்படை வசதிகள் செய்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XXV. அரசு கல்லூரிகளில் உதவி பேராசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

143. அரசு கல்லூரிகளில் 2011–2012 ஆம் கல்வி ஆண்டு முதல் காலியாக உள்ள 1025 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 68 பணியிடங்களையும் சேர்த்து 1093 பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்திட உயர் கல்வித் துறையின் அரசாணை எண்.217, நாள். 13.9.2011 மற்றும் உயர் கல்வித் துறையின் அரசாணை எண். 257, நாள் 15.11.2011ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும், ஆனால் அப்பணியிடங்கள் நிரப்பப்படவில்லை எள்றும் , 31.5.2012 ஆம் நாள் முதல் ஓய்வு மற்றும் முதல்வர் நிலை II பதவி வழங்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள சுமார் 103 காலிப் பணியிடங்கள் மற்றும் பல்வேறு அரசாணைகளால் துவங்கப்பட்ட பணியிடங்களையும் சேர்த்து மொத்தம் 1623 உதவி பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும், துறையில் உள்ள காலிப் பணியிடங்களை 2012–13 ஆம் கல்வி ஆண்டின் இறுதி வரை கௌரவ உதவி பேராசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படுவதாகவும் குழு அறிந்தது. நிரந்தாமாக பணியிடங்களை நிரப்பப்படாமல் அடுத்து வரும் 2013–14 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்களுக்கான வகுப்புகள் எவ்வாறு நடத்தப்படும் என குழு அறிய விரும்புகிறது.

144. அரசு கல்லூரிகளில் 2011–2012 –ஆம் கல்வி ஆண்டில் ஏற்பட்ட 1025 உதவி பேராசிரியர் காலிப்பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 68 பணியிடங்கள் மொத்தம் 1093 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வரியத்தின் மூலம் நிரப்பிட அரசாணை எண்.217, உயர் கல்வி (எப்2) துறை, நாள்.13.9.2011 மற்றும் அரசாணை எண். 29, உயர் கல்வி (எப்2) துறை, நாள்.05.03.2012 வாயிலாக ஆணைகள் வழங்கப்பட்டு தெரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் முதல்வர் நிலை II பதவியுயர்வு வழங்கப்பட்டது மற்றும் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட 103 காலிப் பணியிடங்கள், புதிய பாடப்பிரிவுகளுக்கென தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் 61 + 366 ஆக மொத்தம் 1623 உதவி பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது என்றும், அப்பணியிடங்களை 2012 – 2013–ஆம் கல்வியாண்டில் கௌரவ விரிவுரையாளர்கள் கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டது என்றும், அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள 1093 உதவி பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு, உரிய நபர்களை தெரிவு செய்யுமாறு ஆசிரியர் தேர்வு வாரியத்தை துறை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தகுதியுள்ள நபர்களை தெரிவு செய்வது தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் கோரிய தெளிவுரைகள், விளக்கங்களுக்கு துறையால் பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும் , ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தகுதியுள்ள உதவி பேராசிரியர்களை தெரிவு செய்வதில் காலதாமதம் ஏற்படின் 2013–ஆம் ஆண்டிலும் அரசு கல்லூரிகளில் பாடங்களை வகுப்புகளை நடத்துவதற்கு கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்வது குறித்தும் அரசு பரிசீலிக்கும் என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

145. 2011 ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டும், புதிய பாடதிட்டங்களுக்காகவும், 68 கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும், அரசாணை வெளியிடப்பட்டு 2 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்னும் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதற்கு குழு வருந்தியது. தாமதத்திற்கான காரணம் குறித்து குழு அறிய விரும்பியது.

146. இதற்கு 26.4.2013 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் உயர்கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், நிரந்தர பணியிடங்கள் நிரப்பப்படும்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தான் நிரப்பப்பட வேண்டும் என உச்சநீதிமன்றத்தின் ஆணை உள்ளதால் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்ப துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், அப்போது ஆசிரியர் தேர்வு வாரியம் சில விளக்கங்களை துறையிடம் கோரியதாகவும், அவ்விளக்கங்களை துறை தற்போது அளித்துள்ளதாகவும், குழுவிற்கு தெரிவித்தார்.

147. குழு, உரிய காலத்தில், ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் உயர்கல்வித் துறைக்கும் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு என குழு கருதுகிறது.

148. மாணவர்களின் நலன் கருதி துறை மேலும் காலதாமதம் செய்யாமல் ஆசிரியர் தேர்வு வாரியத்துடன் இணைந்து விரைவாக நடவடிக்கையினை மேற்கொண்டு காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பப்பட வேண்டும்.

XXVI . ஆசிரியரல்லாத காலிப்பணியிடங்களை நிரப்புதல்

149. அரசுக் கல்லூரிகள் அலுவலகங்களின் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் அடிப்படை பணியாளர்கள் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை துறை நிரப்பியதா என குழு அறிய விரும்பியது.

150. அதற்கு அரசு கல்லூரிகளில் 69 இளநிலை உதவியாளர் பணியிடங்களை நிரப்பக்கோரியதில், 30 இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து–தட்டச்சர்களை தேர்வு செய்துள்ளது என்றும், மீதமுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் துறை தெரிவித்தது.

151. மீதமுள்ள ஆசிரியரல்லாத காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

XXVII. அரசு உதவி பெறும் கல்லூரிகளில், (Government Aided Colleges) காலிப் பணியிடங்களை நிரப்புதல்

152. அரசு உதவி பெறும் கல்லூரிகளில், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஆய்வக உதவியாளர், நூலக உதவியாளர் உள்ளிட்ட 481 பணியிடங்களை நிரப்புவதற்கு 28–6–2012–ஆம் நாளிட்ட உயர்கல்வித் தறையின் அரசாணை எண் 114–ல் வெளியிடப்பட்டது. மேலும், அதே அரசாணையில் 573 அலுவலக உதவியாளர்கள், 64 குறியீட்டாளர்கள், 645 துப்புரவுப் பணியாளர்கள் போன்ற பணியிடங்களை நிரப்பிட ஆணை வெளியிடப்பட்டது. ஆனால், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் அப் பணியிடங்கள் இதுவரைக்கும் நிரப்பப்படவில்லை என குழு அறிந்தது. இது குறித்து குழு துறையின் கருத்தினை அறிய விரும்பியது.

153. இது தொடர்பாக, 2008–2011 ஆம் ஆண்டுகளுக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து மண்டல இணை இயக்குநர் மற்றும் முதுநிலை பேராசிரியர்களை கொண்ட ஒரு குழு நியமித்து, அந்தக் குழு ஒவ்வொரு அரசு உதவிபெறும் கல்லூரிகளில் காலிப் பணியிடங்களை ஆய்வு செய்து கொடுக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு கல்லூரிகளுக்கும் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன எனவும், ஆசிரியர் அல்லாத காலி பணியிடங்கள் குறித்த விவரங்களை ஒருசில கல்லூரிகளில் தவறாகக் கொடுத்திருக்கிறார்கள் எனவும் 10 காலிப் பணியிடங்கள் என்றால் 12 காலிப் பணியிடங்கள் என்று கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள் எனவும், இதுகுறித்து துறை ஆய்வு செய்து வருவதாகவும் துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

154. தவறான எண்ணிக்கையில் பணியாளர் எண்ணிக்கையை கல்லூரிகள் வழங்குகின்றன என்பதைக் குழு ஏற்கவில்லை. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆசிரியர்/ ஆசிரியரல்லாத பணியிடங்கள்/ துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் என அனைத்து விவரங்களும் அதாவது அரசால் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை (Sanctioned Strength of Posts) துறைத் தலைமையிடம் இருக்க வேண்டும். கூடுதல் மாணவர்கள் சேர்ந்திருப்பின் அதற்கான பணியிடங்களை அரசிடம் கோரி தோற்றுவிப்பது துறையின் பொறுப்பு ஆகும். எனவே, அனைத்து காலிப்பணியிடங்களை நிரப்பிடவும், அடிப்படைப் பணியாளர் நிமனத்தைப் பொறுத்தவரை நிதித்துறை கலந்தறிதலுடன் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட குழு பரிந்துரை செய்கிறது.

XXVIII. கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்குதல்

155. 2012–13 ஆம் கல்வி ஆண்டில் 51 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உயர்கல்வித் (ஜி) துறையின் அரசாணை எண். 98, நாள் 18.06.2012–ன்படி 299 புதிய பாடப் பிரிவுகள் தொடங்க ஆணை வழங்கியமைக்கு ஏற்ப அனைத்து கல்லூரிகளிலும் இளங்கலை மற்றும் முதுகலை பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளதாகவும், ஆராய்ச்சிப் படிப்புகளான எம்.ஃபில், பி.எச்.டி. பாடப் பிரிவுகளை தொடங்குவதற்கு அக்கல்லூரிகள் சார்ந்த பல்கலைக்கழகத்திலிருந்து கல்லூரிகளுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், விரைவில் மாணவர் சேர்க்கை நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்ட ஆய்வு மற்றும் மாணவர்கள் சேர்க்கை குறித்து குழு அறிய விரும்பியது.

156. 18.6.2012 ஆம் நாளிட்ட உயர்கல்வி (ஜி1) துறையின் அரசாணை எண்.98–ன்படி 51 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் எம்.பில்., மற்றும் பி.எச்.டி. பட்டம் உட்பட புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு, 5516 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

157. தமிழ்நாட்டில் உள்ள இதர கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வினை அவ்வப்போது மேற்கொண்டு அக்கல்லூரிகளில் இல்லாத பாடப்பிரிவுகளை தொடங்கப்பட வேண்டும் என்றும், எம்.பில்., பி.எச்.டி. பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்ட பின்னர் அறிவியல் பாடப்பிரிவுகளுக்குத் தேவையான ஆய்வகம் அமைப்பதற்கு துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXIX. கல்லூரி கல்வி இயக்ககத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டுதல்

158. பெரும் பணி திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு ரூ. 2000 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அத்தொகையில் , சென்னை வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் ரூ. 11 கோடி மதிப்பீட்டில் கல்லூரி கல்வி இயக்ககத்திற்கென சொந்த கட்டிடத்தினை கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதாக குழு அறிகிறது. அக்கருத்துருவின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

159. 2012–13ஆம் நிதியாண்டில் , கல்லூரிக் கல்வித் துறையின் பெரும் பணித்திட்டங்களுக்கென ரூ.19.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கல்லூரி கல்வி இயக்ககத்திற்கென சொந்த கட்டிடம் கட்ட ரூ.8.15 கோடி மதிப்பீட்டில் கருத்துரு பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்றும், அக்கருத்துரு தொடர்பான கோப்பு 23.3.2013 அன்று நிதித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

160. 2012–2013 ஆம் நிதியாண்டு முடிவுற்றதால் மேலும் காலதாமதம் இல்லாமல், கல்லூரி கல்வி இயக்ககத்திற்கென சொந்த கட்டிடம் கட்டுவதற்கான கருத்துருவிற்கு நிதித்துறையின் ஒப்புதல் விரைவில் பெற்று தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

161. குழு, கிருஷ்ணகிரி மாவட்டம் ஆதிதிராவிடர் கல்லூரி மாணவியர் விடுதியை ஆய்வு செய்ததில் அந்த விடுதி பிரதான சாலை (Main Road) ஒட்டி அமைந்துள்ளது எனவும், அதன் சுற்றுச்சுவர் மிகவும் உயரம் குறைவாக உள்ளதால், அதனை உயர்த்தித் தர வேண்டும் என குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும் விடுதியை ஆய்வு செய்த போது விடுதியின் கழிவறை சரியாக இல்லை என்றும், நடந்து செல்கின்ற பாதையும் சரியாக இல்லை எனக் குழு அறிந்தது. இந்த சூழ்நிலையில் அங்கு தங்கியுள்ள மாணவிகளின் நிலை எவ்வாறு இருக்கும் என்று குழு எண்ணியது. இது குறித்து துறை எடுத்த நடவடிக்கையை குழு அறிய விரும்புகிறது.

162. இதற்கு, கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி ஆதிதிராவிடர் நலத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த விடுதியின் சுற்றுச் சுவரை உயர்த்துதல் மற்றும் இவ்விடுதியில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை சார்ந்த துறையாலேயே மேற்கொள்ள இயலும். எனினும், குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்யக் கோரி ஆதிதிராவிடர் நலத்துறையை அணுகுமாறு அக்கல்லூரி முதல்வருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மற்றும் ஆதிதிராவிடர் நலன் (ம) பழங்குடியினர் நலத் துறையின் துணைச் செயலாளர் ஆகியோர் 12.04.2013 அன்று கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

163. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட துறை நடவடிக்கையை மேற்கொண்ட பின்னர் குழுவிற்கு அறிக்கையாக அனுப்பப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

164. குழு, திருவாரூர் மாவட்டம், முதல்வர், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கொருக்கை அவர்கள் அக்கல்லூரி புதிதாகத் துவக்கப்பட்டதால் அங்கு அடிப்படை வசதிகள் மற்றும் சுமார் 1 கி.மீ. நீளம் கொண்ட பாமினி கொருக்கை சாலை மிகவும் குறுகலாக உள்ளதாகவும், அதனை அகலப்படுத்தி தரவேண்டும் எனக் குழுவிடம் கோரிக்கை வைத்தார். அதற்கு குழு சாலையின் தூரம் சுமார் 1 கி.மீ. உள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே இதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு கருத்து தெரிவித்தது. இதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்புகிறது.

165. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அரசு பலவகைக் கல்லூரி, கொருக்கையில் அடிப்படை வசதிகள் மற்றும் ஒரு கி.மீ. நீளம் கொண்ட பாமினி கொருக்கை சாலையை அகலப்படுத்தவும் கல்லூரி முதல்வர் அவர்களால் குழுவிடம் வேண்டப்பட்டது. மேற்படி அடிப்படை வசதிகள் கோரி தலைமை பொறியாளர் மற்றும் சம்மந்தப்பட்ட பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கும் பாமினி கொருக்கை சாலையை அகலப்படுத்துதல் குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் முதல்வர் தெரிவித்துள்ளார். கல்லூரி முதல்வரின் கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் திருவாரூர் நெடுஞ்சாலை துறை மண்டல பொறியாளர் ஆகியோர் 12.04.2013 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

166. துறை தெரிவித்துள்ளவாறு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் மண்டல பொறியாளர் ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை ஒன்று குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

167. பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புப் கல்லூரியான நன்னிலம் மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகியவற்றிற்கு சொந்தக் கட்டிடத்திற்கான இடம் தேர்வு பணி வருவாய்த் துறை மூலம் நடைபெற்றுவருவதாக குழு அறிகிறது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்புகிறது.

168. திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி நன்னிலத்தில் 2011–2012 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நன்னிலம் வட்டம், மாப்பிள்ளை குப்பம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆணைக்குப்பம் கிராமத்திலுள்ள 5,35,508 ஹெக்டேர் நிலம் கண்டறியப்பட்டது. இந்நிலத்திற்கான கிரைய தொகை சுமார் 12 கோடி ரூபாய் என இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் தெரிவிக்கப்பட்டது. இந்நிலத்தின் தொகை அதிகப்படியாக உள்ளதால், அரசு உயர்கல்வித்துறை செயலர் அவர்கள் அறிவுரைக்கு ஏற்ப அரசு துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை இலவசமாக தெரிவு செய்து தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கப்பட்டது. அதே போல், திருத்துறைப்பூண்டிக்கு, தண்டலச்சேரி கிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான 7.79 ஹெக்டேர் நிலம் கண்டறியப்பட்டது. இந்நிலத்தின் தொகை

சுமார் 50 இலட்சம் என தெரிவிக்கப்பட்டது. பொதுவாக இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலங்களின் வழிகாட்டு மதிப்பு அல்லது சந்தை மதிப்பு அவற்றில் எது அதிகமானதோ அதனுடன் அம்மதிப்பின் 50% கூடுதல் தொகையும் சேர்த்து நிலங்களின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்படுவதால் நிலங்களின் மதிப்பு அதிகமாக உள்ளது. இத்தொகையை செலுத்துவதற்கு பல்கலைக்கழகங்களுக்கு நிதி ஆதாரங்கள் இல்லை. எனவே, இந்து சமய அறநிலையத் துறை நிலங்களை பெறுவதற்கு பதிலாக மற்ற அரசு துறைகளின் புறம்போக்கு நிலங்களை பெறுவது தொடர்பாக, மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிலமாற்றம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர்கள் 12.04.2013 அன்று கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டதாக துறையின் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

169. துறை தெரிவித்தவாறு, மேற்படி கல்லூரிகளுக்கான இடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

170. குழு, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் பாரதிதாசன் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரி ஒன்று சென்ற நிதியாண்டில் துவங்கப்பட்டு மகாராஜபுரம், கீரிபாதி கிராமத்தில் உள்ள குருகுலத்திற்கு எதிர்ப்புறத்தில் அரசினர் பயிற்சி மைய வளாகத்தில 10.13 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலத்தில் நிரந்தர கட்டிடம் கட்ட தெரிவு செய்யப்பட்டது எனவும், அதற்கான நடவடிக்கை குறித்த கோப்புகள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அக்கருத்துருவின் நிலை என்ன என்றும், நிலம் ஒதுக்கப்பட்டிருப்பின் கட்டிடப் பணிகள் எப்போது துவங்கப்படும், அதன் மதிப்பீடு போன்ற விவரங்களை குழு அறிய விரும்புகிறது.

171. அதற்கு நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்று 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டது. மகாராஜபுரம், கீழ்பாதி கிராமத்தில் உள்ள குருக்குலத்திற்கு எதிர்ப்புறத்தில் உள்ள ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கம் என்ற அரசு துறைக்குச் சொந்தமான ஆசிரியர் பயிற்சி மைய வளாகத்தில் உள்ள புல எண்.637, 639, 640 ஆகிய இடங்கள் கண்டுயறியப்பட்டு 10.13 ஏக்கர் அரசு புறப்போக்கு நிலத்தில் கல்லூரிக்கான கட்டிடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலமாற்றம் தொடர்பான கருத்துருவினை நில்நிர்வாக ஆணையர் வழியாக அனுப்புமாறு மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் இயக்குனர், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரை கேட்டுக்கொண்டுள்ளார். அக்கருத்துரு பெறப்பட்டவுடன் இந்நிறுவனத்தின் இயக்குனர் தனது பரிந்துரையுடன் அரசின் பள்ளிக் கல்வித் துறைக்கு உரிய கருத்துருவினை அனுப்புவார். இப்பொருள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் மற்றும் பல்கலைக்கழக பதிவாளர் ஆகியோர் கடிதம் மூலம் 12.04.2013 அன்று கேட்கப்பட்டுள்ளனர் என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

172. துறை தொடர் நடவடிக்கையினை மேற்கொண்டு மேற்படி கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கான இடத்தினை கையகப்படுத்தி பணிகள் துவங்கப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

173. குழு, சேலம் மாவட்டம் எடப்பாடி பகுதியில் பெரியார் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியில் 2012–2013 ஆம் கல்லூரி ஆண்டில் துவங்க ஆணையிடப்பட்டு 5 பாடப் பிரிவுகளுக்கு மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது எனவும், கல்லூரிக்குத் தேவையான நிலத்தை ஒதுக்கக் கூறி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடித எண்.பெ.ப/ப7/நிலம்/07468/2012 நாள் 3.5.2012 மூலம் அதற்கான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாக குழு அறிந்தது. அக்கருத்துருவின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

174. இதற்கு, சேலம் மாவட்டம் எடப்பாடியில் பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு எடப்பாடி தாலுக்கா தங்காயூர் கிராமத்தில் புல எண். 32/1 இல் 19.18 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலமாற்றம் தொடர்பாக நில நிர்வாக ஆணையர் தனது பரிந்துரையுடன் அரசின் வருவாய்த் துறைக்கு கருத்துரு அனுப்பி வைத்துள்ளார் என்றும், இந்நிலமாற்றத்திற்கு உயர்கல்வித் துறையும் தனது இசைவினை அளித்துள்ளது என்றும், இது தொடர்பாக வருவாய்த்துறையில் இறுதி ஆணைகள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

175. துறை வருவாய் துறையிடமிருந்து இறுதி ஆணையினை விரைவாக பெற்று கல்லூரிக்கான நிரந்தர கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான இடத்தினை கையகப்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

176. குழு, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அரசினர் பல்தொழில் நுட்பக்கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, முக்கியமான தேவைகளாக உள்ளதால் அவற்றை செய்து தருமாறு குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இது குறித்து ஏதேனும் கருத்துரு துறையிடம் உள்ளதா என குழு அறிய விரும்புகிறது.

177. கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, போன்ற தேவைகளை செய்து தருமாறு திருச்சி, தொழில்நுட்பக் கல்லூரிக் கோட்டம், பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் அவர்களுக்கு கல்லூரி முதல்வர் அவர்களால், கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும், பொதுப்பணித்துறையால், கழிப்பறை வசதி மற்றும் ஒருசில வகுப்பறைகளும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றும், ஏனைய வசதிகள் செய்து தருவது குறித்து நடவடிக்கை எடுக்க செயற்பொறியாளர் அவர்களிடம் பணிக்கப்பட்டுள்ளது. கல்லூரி முதல்வரின் கடிதத்தின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் திருச்சிராப்பள்ளி தொழில்நுட்பக் கல்விக் கோட்ட செயற்பொறியாளர் ஆகியோர் 12.04.2013 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

178. மேற்படி கல்லூரிக்கான அனைத்து பணிகளையும் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற்று மாணவர்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கையினை துறை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

179. குழு, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிங்கிப்பட்டியில் அரசுப் பொறியியல் கல்லூரி தொடங்க அரசு அனுமதி பெறப்பட்டது எனவும், நிலம் மாற்றம் சம்பந்தமான கருத்துரு அரசுக்கு அனுப்பட்டுள்ளதாக குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்புகிறது.

180. தஞ்சாவூர் மாவட்டம் சிங்கிப்பட்டி கிராமத்தில் அரசு பொறியியல் கல்லூரி ஒன்று 2013–14 ஆம் கல்வியாண்டு முதல் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், அகில இந்திய தொழில் நுட்பக் கல்வி குழுமத்தின் விதிமுறைகளின்படி 10 ஏக்கருக்கு மேல் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு பொறியியல் கல்லூரி அமைப்பதற்கான நிலங்களை தொழில் நுட்பக் கல்வித் துறைக்கு நிலமாற்றம் செய்வதற்கான கருத்துரு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், அரசாணை (நிலை) எண்.81/வருவாய் (LD–4(1)) துறை, நாள் : 15.3.2013–ல் நிலம் இத்துறைக்கு மாற்றி ஆணையிடப்பட்டுள்ளது. 2013–14–ம் ஆண்டு கல்லூரி துவங்க ஏதுவாக தேவையான கட்டிடத்தை அரசு நிலமான டி.பி.சானிடோரியம் மருத்துவமனை, செங்கிப்பட்டி தற்காலிக இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. அரசு பொறியியல் கல்லூரி, தஞ்சாவூருக்கு தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அரசாணை (நிலை) எண்.10/உயல்கல்வி (ஜே2) துறை, நாள் : 30.1.2013–ல் நிர்வாக ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல், கட்டுமான பணிகள் மற்றும் பொறியியல் கல்லூரிக்குத் தேவையான கணினி, இதர உபகரணங்கள் வாங்க ரூ. 89.90 கோடி அனுமதியும், அதில் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 14.10 கோடி நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

181. சிங்கிப்பட்டி கிராமத்தில் இயங்கும் அரசு பொறியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்கப் பெற வேண்டும் என்றும், மாணவர்களின் நலன் கருதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தேவையான கணினி மற்றும் இதர உபகரணங்கள் பெற்று வழங்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

182. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் எதன் அடிப்படையில் துவங்கப்படுகின்றன, பாடப் பிரிவுகள் எவ்வாறு தேர்வு செய்யப்படுகிறது, அக்கல்லூரிகளின் நிதி ஆதாரம் பணிபுரிவோர்களுக்கான சம்பளம், பணியாளர்களின் பணி விதிகள் (Service Rules) மற்றும் நடத்தை விதிகள் (Conduct Rules) குறித்த விவரங்களை குழு அறிய விரும்பியது.

183. தமிழ்நாட்டின் ஊரகப்பகுதியில் உள்ள மாணவர்கள் உயர்கல்வி பெறவேண்டும் என்ற அடிப்படையிலும், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் அளிக்கும் கோரிக்கைகளின் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படுகின்றன என்றும், அக்கல்லூரிகளில் துவக்கப்படும் பாடப்பிரிவுகளை அந்தந்தப் பல்கலைக்கழகங்களே தெரிவு செய்கின்றது என்றும் இக்கல்லூரிகளுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு பணியாளர் சம்பளம், அலுவலக செலவினம், ஆகிய தொடர் செலவினம், இயந்திரங்கள், கணினிகள் புத்தகங்கள், அறைகலன்கள், ஆகிய தொடரா செலவினங்களுக்கு நிதி அரசால் அளிக்கப்படுகிறது. மேலும் இக்கல்லூரிகளுக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கான செலவினை மாநில அரசு, பல்கலைக்கழகம் ஆகியவை பகிர்ந்துகொள்கிறது. இக்கல்லூரிகளில் மாதிரி கல்லூரிகளுக்கு ஈட்டிட செலவினம் மேற்கொள்ள 1/3 பகுதி மத்திய அரசிடமிருந்தும் பெறப்படுகிறது. இக்கல்லூரியில் பணிபுரியும் பணியாளர்களுக்கான பணிவிதிகள் மற்றும் நடத்தை விதிகள் அந்தந்த பல்கலைக்கழக சட்ட விதிகளின் படி பின்பற்றப்படுகிறது என குழுவிற்கு துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

184. குழு மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது துறை தெரிவித்துள்ள கருத்திற்கு மாறான நிலையினை கண்டது. தர்மபுரி மாவட்டம் பென்னகரத்தில் இயங்கும் பெரியார் பல்கலைக் கழகத்தில் உறுப்புக் கல்லூரியின் கட்டிடப் பணிகள் மிகவும் தாமதமாக நடைபெறுவதாக குழு அறிந்தது. அதேபோல் 2004 ஆம் ஆண்டு ஆண்டிப்பட்டியில் துவங்கப்பட்ட பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கு சுற்றுச்சுவர் இல்லாமலும், கழிப்பிட வசதி இல்லாமலும் போதிய வசதிகள் ஏதும் இல்லாமல் உள்ளது .

185. இதற்கு 26.4.2013 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்கு பிறகு அந்த உறுப்புக் கல்லூரிக்கான அனைத்து வசதிகளையும் அந்தந்த பல்கலைக் கழங்கள் தான் ஏற்கவேண்டும் என்றும், ஆனால் அப்பல்கலைக் கழகங்கள் செய்வதில்லை எனவும் தெரிவித்தார். மேலும், அப்பல்கலைக் கழகங்களுக்குத் தேவையான நிதியினை அவர்களே ஏற்படுத்திக் கொள்ள இயலும் என்றும் ஆனால் அப்பல்கலைக் கழகங்கள் அதனை செய்வதில்லை என்றும் தெரிவித்தார். கடந்த 10–15 ஆண்டுகளில் பல்கலைக் கழகங்களில் அதிகமான அளவு தணிக்கை குறைபாடுகள் (Audit objections) உள்ளது என்றும், குறிப்பாக, மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், பதிவாளர் மற்றும் இதர பணியாளர்களின் சம்பள விகிதத்தில் குறைபாடு உள்ளதால் அதனை சரிசெய்ய குழு ஒன்று அமைக்கப்பட்டு சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

186. பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் உறுப்புக் கல்லூரிகளின் செயல்பாடு எவ்வாறு உள்ளது எனக் கண்காணிக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது என குழு அறிய விரும்பிய போது, துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உறுப்புக் கல்லூரிகளின் செயல்பாட்டை கண்காணிக்கும் அதிகாரம் உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் தெரிவித்தார்.

187. பல்கலைக் கழகங்களின் கீழ் செயல்படும் உறுப்புக் கல்லூரிகளின் செயல்பாட்டை மேம்படுத்த துறை குழு ஒன்றினை அமைத்து நிதி ஆதாரங்களை பெருக்குவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பெற வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

188. குழு, பென்னகரத்தில் இயங்கி வரும் பெரியார் பல்கலைக் கழகத்தில் உறுப்புக் கல்லூரியில் LCD Projector வாங்க ரூ. 10 இலட்சத்திற்கான கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளதாக குழு அறிகிறது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

189. 69 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ரூ. 100 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பென்னாகரத்தில் இயங்கும் பெரியார் பல்கலைக் கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 4 LCD Projector கொள்முதல் செய்வதற்கு பல்கலைக்கழகத்தால் கேட்கப்பட்டுள்ளது என்றும் அக்கல்லூரிக்கு பிற உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது LCD Projector கொள்முதல் செய்வதற்கு உரிய நிதி வழங்கப்படும் என துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

190. மேற்படி கல்லூரியிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவிற்கு விரைவாக ஒப்புதல் அளித்து LCD Projector, வழங்குவதற்கும், LCD Projector வழங்க கோரிக்கை வரப்பெறாத இதர கல்லூரிகளுக்கு ஒரு காலவரையறையினை நிர்ணயித்து தேவையின் அடிப்படையில் வழங்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

191. புதுக்கோட்டை மாவட்டம் அனைத்துக் கலைக் கல்லூரிகளிலும் தொடுதிரை மூலம் முதுநிலை மாணவர்களுக்கும் மற்றும் ஆய்வு நிறைஞர் மாணவர்களுக்கும் கற்பிக்கப்படுகிறது என்றும், அரசுக் கல்வியியல் கல்லூரியில் இளநிலையிலேயே தொடுதிரை மூலம் கற்பிக்கப்படுகிறது எனவும். மாணவர்களுக்கு அவர்களது மின்னஞ்சல் முகவரி (E mail I.D) மற்றும் வலைதளத்திலிருந்து அவர்களுக்குத் தேவையானவற்றை (Course material) எடுத்துக் கொள்ளலாம் என குழு அறிகிறது. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழு அறிய விரும்புகிறது.

192. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் தொடுதிரை மூலம் முதுநிலை மாணவர்களுக்கும் மற்றும் ஆய்வு நிறைஞர் மாணவர்களுக்கும், அரசுக் கல்வியியல் கல்லூரியில் இளநிலையிலேயே தொடுதிரை மூலம் கல்வி கற்கவும். மாணவர்களுக்கு அவர்களது மின்னஞ்சல் முகவரி (E mail I.D.) மற்றும் வளையதளத்திலிருந்து அவர்களுக்குத் தேவையானவற்றை (Course Material) எடுத்துக் கொள்ளவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், சில கல்லூரிகளில் இம்முறை இக்கல்வியாண்டிலேயே பின்பற்றப்பட்டு வருகிறது என்றும் வரும் கல்வி ஆண்டு முதல் இம்முறையை அனைத்து கல்லூரிகளும் பின்பற்றி கல்வி கற்பிக்கப்படும் என குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

193. துறை நிர்ணயித்தது போல் வரும் கல்வி ஆண்டு முதல் அனைத்து கல்லூரிகளிலும் மேற்படி முறையினை பின்பற்ற நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

194. குழு மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது மாணவர்களுக்கு இணையதளம், (Smart Board) மற்றும் கணினி வழியாக பல்லூடகத்தை (Multmedia) உபயோகித்து பாடங்களை பயிற்றுவிக்கும் முறையை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. குழு இந்த முறையை அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் பின்பற்றப்படுகிறதா என்றும் இதில் மாணவர்களின் பங்கு எவ்வாறு உள்ளது மற்றும் இம்முறையை மேம்படுத்த துறையின் தேவைகள் குறித்தும் குழு அறிய விரும்பியது.

195. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இணையதளம், (Smart Board) மற்றும் கணினி வழியாக பல்லூடகத்தை (Multimedia) உபயோகித்து பாடங்களை பயிற்றுவிக்கும் முறையை செயல்படுத்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணினி கல்வி பயிற்சியில் வலைதளத் தேடுதல் கற்பிக்கப்படுவதால் சில கல்லூரிகளில் இம்முறை இக்கல்வியாண்டிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டு கல்லூரி மாணவ / மாணவிகளுக்கும் அக மதிப்பிடல் முறையில் உள்ள ஒப்படைப்புத்தாள் சமர்ப்பித்தலுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையவும், பயிற்சி பெறும் மாணவ / மாணவிகள் மின் அஞ்சல் அடையாளம் உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து கல்லூரிகளிலும் வரும் கல்வியாண்டில் இதே முறையை பின்பற்றி கல்வி கற்பிக்கப்படும் என துறை சார்பாக தெரிவிக்கப்பட்டது.

196. மாணவர்களின் முன்னேற்றத்திற்காக துறை தெரிவித்தது போல் மாணவ மாணவிகளுக்கு மின்னஞ்சல் அடையாளத்தை உருவாக்கவும், 2013–14 ஆம் கல்வி ஆண்டு முதல் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், இணைய தளம் மற்றும் கணினி வழியாக பல்லூடக்கத்தின் மூலம் பாடங்களை பயிற்று வைக்கும் முறையை செயல்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

197. மன்னை இராஜகோபாலசாமி அரசுக் கலைக் கல்லூரியில் இளங்கலை விலங்கியல், முதுகலை தாவரவியல், இயற்பியல் துவங்குவதற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குழு அறிகிறது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்புகிறது.

198. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மன்னை இராஜகோபாலசாமி அரசு கலைக் கல்லூரியில் 2013–2014 ஆம் கல்வியாண்டில் முதுகலை தாவரவியல் மற்றும் முதுகலை இயற்பியல் துவங்குவதற்கு கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என துறை தெரிவித்தது.

199. மேற்குறிப்பிட்ட பாடப் பிரிவுகளுக்கு இந்த கல்வி ஆண்டு முதல் **மாணவர் சேர்கை நடைபெறும் வகையில் துறையிடம் உள்ள கருத்துருவிற்கு விரைவில் ஒப்புதல் அளித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.**

XXX. மத்திய அரசின் நிதி உதவித் திட்டம்

200. திருவாரூர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்கப்பட்டது எனவும், அக்கல்லூரிக்கு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள், கணினிகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 2.09 கோடி நிதி மத்திய அரசின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் குழு அறிகிறது. ஒதுக்கப்பட்ட தொகையில் செலவு செய்யப்பட்ட தொகை, வாங்கப்பட்ட பொருட்கள், திட்டத்தினை செயல்படுத்த காலஅளவு போன்ற விவரங்களை குழு அறிய விரும்புகிறது.

201. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிக்கு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள், கணினிகள் மற்றும் நூலகப்புத்தகங்கள் வாங்குவதற்கு ரூபாய் 2.09 கோடி நிதி மத்திய அரசின் நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டது என்றும், அதில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூபாய் 73.33 இலட்சமும், மரத்தளவாடங்கள் வாங்குவதற்கு ரூபாய் 35.99 இலட்சமும், கணினிகள் வாங்குவதற்கு ரூபாய் 75.08 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 184.40 இலட்சங்கள் செலவிடப்பட்டு உபகரணங்கள், இயந்திரங்கள், கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டதாகவும், மத்திய அரசின் ரூ. 2.09 கோடி நிதியொதுக்கத்தில், செலவு செய்யப்பட்ட ரூ. 184.40 இலட்சம் போக மீதமுள்ள 24.60 இலட்சம் செலவு செய்யப்பட்டுவிட்டதா என்றும் அவ்வாறு செலவு செய்யப்படவில்லை எனில் அதற்கான காரணத்தை தெரிவிக்குமாறு அக்கல்லூரி முதல்வர் 12.04.2013 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என துறை சார்பாக குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

202. பயன்பாட்டு சான்றினை (Utilisation Certficate) அரசினர் பலவகை தொழில்நுட்ப கல்லூரி முதல்வரிடமிருந்து பெற்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், மீதமுள்ள தொகையை நிதி ஒப்பளிப்பு செய்ய துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXI. மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

203. குழு நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது மத்திய அரசின் நிதி உதவி திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சீனிவாசா சுப்பராய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, புத்தூர் என்கிற கல்லூரியினை தேர்வு செய்யப்பட்டுள்ளதாகத் குழு அறிந்தது. அக்கல்லூரியில் எத்தகையான பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது, அவற்றின் மதிப்பீடு குறித்த விவரங்களை குழு அறிய விரும்பியது.

204. மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழ் (Upgradation of Infrastructure Facilities to Existing Polytechnic Colleges) ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு ரூபாய் 2 கோடி வழங்கப்படுகிறது என்றும், அதன்படி நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், புத்தூரில் உள்ள சீனிவாசா சுப்பராயா அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு இயந்திரங்கள், தளவாடங்கள், உபகரணங்கள் ஆகியவை கொள்முதல் செய்ய முதல் தவணையாக ரூபாய் 10 இலட்சம் பெறப்பட்டு முழுவதுமாக செலவிடப்பட்டு மத்திய அரசிற்கு பயன்பாட்டு சான்றிதழ் அனுப்பப்பட்டுவிட்டது என்றும், இரண்டாம் தவணையாக அக்கல்லூரியில் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான இயந்திர தளவாடங்கள், கருவிகள், உபகரணங்கள் வாங்க ரூபாய் 1,90,00,000/– மத்திய அரசின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதி கோரி மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டபின் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் துறை சார்பாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

205. மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்தருவிற்கு விரைவில் ஒப்புதல் பெறும் வகையில் நடவடிக்கையை மேற்கொண்டு இரண்டாவது தவணையாக கோரியுள்ள தொகையினைப் பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக செலவு செய்து கல்லூரியினை தன்னிறைவு பெற்ற கல்லூரியாக உருவாக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

* * *

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பாகம்–2

நிகழ்ச்சி பகுதி

2012 ஜூன் 29, வெள்ளிக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள், வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1–இல் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர் க. கிருஷ்ணசாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, 2012–2013 ஆம் ஆண்டு எந்தெந்த துறைகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என விவாதிக்க குழு கூடியது.

பின்னர், குழு கீழ்க்கண்ட துறைகளின் மதிப்பீடுகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதென முடிவு செய்தது :

1. வேளாண்மைத் துறை
2. உயர் கல்வித் துறை
3. ஆதிதிராவிடர் நலன் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)
4. பாதாளச் சாக்கடை மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டம் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை)

இதைத் தொடர்ந்து குழு தேர்வு செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் குறித்து ஆய்வு செய்ய மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்தது.

2012 ஆகஸ்ட் 8, புதன்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8 ஆம் நாள், புதன்கிழமை காலை 10.00 மணியளவில், தஞ்சாவூர் மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. டி. செங்குட்டுவன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. கு. நல்லதம்பி
திரு. வ. நீலகண்டன்
திரு. அ. பாப்பா சுந்தரம்
செல்வி கே. பாலபாரதி
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . துணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, தஞ்சாவூரில் உள்ள "பாரதிதாசன் பல்கலைக்கழக பெண்கள் கல்லூரியை" பார்வையிட்டது. அப்பல்கலைக்கழக கல்லூரி பார்வையிட்ட குழுவை கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மற்றும் உதவிச் செயற் பொறியாளர் ஆகியோர் கல்லூரியைப் பற்றி விளக்கினார்கள். இக்கல்லூரியில் 113 மாணவிகள் மற்றும் 11 விரிவுரையாளர்களுடன் தொடங்கிய இக்கல்லூரி தற்போது 13 இளநிலைப் பிரிவுகளும், 5 முதுநிலைப் பிரிவுகளும், 6 ஆராய்ச்சித் துறைகளுடனும், 107 விரிவுரையாளர்களைக் கொண்டு 2578 மாணவிகளுடன் கல்விச் சேவை செய்து வருகிறது என தெரிவித்தார்.

பின்னர் குழு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, திருவாரூர் அரசு விருந்தினர் மாளிகையில் சென்று தங்கியது.

2012 ஆகஸ்ட் 9, வியாழக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில், திருவாரூர் மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. டி. செங்குட்டுவன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. கு. நல்லதம்பி
திரு. வ. நீலகண்டன்
செல்வி கே. பாலபாரதி
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . துணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, திருவாரூரில் உள்ள திருத்துறைப்பூண்டி அருகே உள்ள தண்டலைச்சேரி என்ற இடத்தில் குளத்தில் அமைக்கப்பட்ட ஆழ்குழாய் செறிவூரீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட குழாய்களைக் பார்வையிட்டது. அத்தண்டலைச்சேரியை பார்வையிட்ட குழுவை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆகியோர் அத்தண்டலைச்சேரியில் அமைக்கப்பட்ட குழாய்களைப் பற்றி விளக்கினார்கள். 'தமிழகத்திலேயே முதன்முதலாக திருவாரூர் மாவட்டத்தில்தான ஆழ்குழாய் செறிவூரீர்த் திட்டம் என்னும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குளங்கள் மற்றும் நீர்நிலைகளின் நடுவில், ஆழ்குழாய் அமைப்பதன் மூலமாக, மழைக்காலம் மற்றும் அதிக தண்ணீர் உள்ள காலங்களில், தண்ணீர் வீணாகாமல் பூமிக்கு அடியில் மணல் பரப்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு சேமிக்கப்படுகிறது. இதனால் உப்பு நீர் உட்புகுவதை தடுத்து, நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுகிறது. இதற்காகும் மொத்தச் செலவு ரூ.7,500 ஆகும் எனத் தெரிவித்தார்.

பின்னர் குழு, திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, நாகப்பட்டினம் அரசு விருந்தினர் மாளிகையில் சென்று தங்கியது.

2012 ஆகஸ்ட் 10, வெள்ளிக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில், நாகப்பட்டினம் மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. கு. நல்லதம்பி
திரு. வ. நீலகண்டன்
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . துணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, நாகப்பட்டினம் உள்ள "பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு மற்றும் அறிவியல் கல்லூரியை" பார்வையிட்டது. அப்பல்கலைக்கழக கல்லூரி பார்வையிட்ட குழுவை கல்லூரி முதல்வர் (பொறுப்பு) கல்லூரியைப் பற்றி விளக்கினார். இக்கல்லூரியில் இளங்கலை தமிழ், இளங்கலை ஆங்கிலம், வணிக நிர்வாகவியல், இளம் அறிவியல், கணிதம் ஆகிய 5 பாடப் பிரிவுகளில் வகுப்புகள் நடைபெற உள்ளது. ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் 60 மாணவர்கள் வீதம், 5 பாடப் பிரிவுகளுக்கு மொத்தம் 300 மாணவ, மாணவியர்கள் சேர்ந்து படிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது என தெரிவித்தார். பின்னர் குழு, நாகப்பட்டினம் நகராட்சிக்குச் சொந்தமான தாமரைக் குளத்தினைப் சென்று பார்வையிட்டது.

பின்னர் குழு, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2012 அக்டோபர் 16, செவ்வாய்க்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில், தருமபுரி மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. டி. செங்குட்டுவன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, தருமபுரி மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரியை பார்வையிட்டது. அக்கல்லூரியை முதல்வரும், கல்லூரிக் கல்வி துணை இயக்குநரும் விளக்கினார்கள். அப்போது நூலகத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வகுப்பு நடைபெறுவதையும் குழு கண்டறிந்தது. இது குறித்து குழு வினவியபோது, தற்போது போதுமான கம்ப்யூட்டர் ஆய்வக வசதி இல்லை என்றும் அவற்றை அமைத்துத் தரவேண்டுமென்றும், 3600–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருவதால் ஆடிட்டோரியம் ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

பின்னர் குழு, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, கிருஷ்ணகிரி அரசினர் விருந்தினர் மாளிகையில் சென்று தங்கியது.

2012 அக்டோபர் 17, புதன்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.30 மணியளவில், கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. தங்கதமிழ்செல்வன்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. ஆர். கீனிவாசன்
திரு. டி. செங்குட்டுவன்
திரு. ப. தன்சிங்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரியை பார்வையிட்டது. அக்கல்லூரியை முதல்வர் அரசு கலைக் கல்லூரி அவர்கள் விளக்கினார். அப்போது இக்கல்லூரியில் 596 மாணவியர்களுக்கு விலையில்லா மடிக் கணினி வழங்கப்பட்டது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர் 455 எண்ணிக்கை உள்ளதாகவும் அவர்களுக்கு ரூ.26,03,326/– உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், அதைப்போல மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் 756 எண்ணிக்கையிலும் அவர்களுக்கு ரூ.35,56,375/– உதவித்தொகை வழங்கப்பட்டது என்று குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் குழு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, சேலம் அரசினர் விருந்தினர் மாளிகையில் சென்று தங்கியது.

2012 அக்டோபர் 18, வியாழக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், சேலம் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி. த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, சேலம் மாவட்டத்தில் அரசு உதவி பெறும் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியை பார்வையிட்டது. அக்கல்லூரியை பார்வையிட்ட குழுவை கல்லூரி இயக்குநர், செயலாளர் மற்றும் முதல்வர் ஆகியோர் கல்லூரியை பற்றி விளக்கினார்கள். அப்போது இக்கல்வியாண்டில் 2225 மாணவிகள் கல்வி பயின்று வருவதாகவும், அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 122 என்றும், ஆசிரியரல்லாத பணியிடங்கள் 57 என்றும், சுயநிதி பிரிவில் 9 ஆசிரியர் பணியிடங்கள் உள்ளதாவும், உதவிபெறும் பணியிடங்களில் தற்போது 92 பேராசிரியர்களும், 31 ஆசிரியரல்லாத பணியாளர்களும் பணிபுரிந்து வருவதாக என்றும் தகவலை தெரிவிக்கப்பட்டது.

பின்னர் குழு, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2012 நவம்பர் 1, வியாழக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள், வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை–600 009, சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்தில் உள்ள குழுக் கூட்ட அறையில் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர் க. கிருஷ்ணசாமி
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. கு. நல்லதம்பி
திரு. வ. நீலகண்டன்
திரு. அ. பாப்பா சுந்தரம்
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. கூ. பூபதி . . சார்புச் செயலாளர்

குழு, 2012–2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு சில வடஇந்திய மாநிலங்களுக்கு ஆய்வுப்பயணம் மேற்கொள்வது தொடர்பாக கூடியது. சிறிதுநேர விவாதத்திற்குப் பின்னர் குழு கொல்கத்தா, பாக்டோத்ரா, டார்ஜிலிங் மற்றும் புதுதில்லிக்கு டிசம்பர் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் ஆய்வுப்பயணம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்தது.

பின்னர் குழு 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் "ஊரக வளர்ச்சி" குறித்த பதினொன்றாவது அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. வரைவு அறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது. குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அறிக்கையை குழுவின் கையொப்பமிட்டு பேரவைக்கு அளிக்க குழுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

2013 ஜனவரி 2, புதன்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 2 ஆம் நாள், புதன்கிழமை காலை 8.00 மணியளவில், சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறையில் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர் க. கிருஷ்ணசாமி
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

குழு மேற்கு வங்கம், சிக்கிம் ஆகிய மாநிலங்களில் ஆய்வுப் பயணம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடியது. பின்னர் திட்டமிட்டபடி மேலே குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு ஆய்வுப்பயணம் மேற்கொண்டது.

2013 பிப்ரவரி 21, வியாழக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில், புதுக்கோட்டை மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகை 'ரோஜா இல்லத்தில்' கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. அ. பாப்பா சுந்தரம்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திருமதி. சி. சகுந்தலா . . சார்புச் செயலாளர்

குழு, புதுக்கோட்டை நகரில் அமைந்துள்ள அரசு கல்வியியல் கல்லூரியை பார்வையிட்டது. இக்கல்லூரியில் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் கௌரவ விரிவுரையாளர்களை நியமித்துக்கொள்ள தற்போதைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாண–மாணவியருக்கு தனித்தனியாக விடுதிகள் உள்ளன. இக்கல்லூரியில் தற்போது 9 ஆசிரியர்களும் 8 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு சிறப்புக் கல்வி உதவித் தொகை பெற்று வழங்கப்பட்டு வருகிறது என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

பின்னர் குழு, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, திருச்சிராப்பள்ளி அரசு விருந்தினர் மாளிகையில் சென்று தங்கியது.

2013 பிப்ரவரி 22, வெள்ளிக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. அ. பாப்பா சுந்தரம்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திருமதி. சி. சகுந்தலா . . சார்புச் செயலாளர்

குழு, திருச்சிராப்பள்ளியில் ஈ.வே.ரா. கலைக் கல்லூரியை பார்வையிட்டது. இக்கல்லூரியில், தற்போது 3400 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இக்கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் மொத்தம் 95 ஆசிரியர்கள் முனைவர் பட்டம் பெற்றவர்கள். இளமுனைவர் பட்டபடிப்புகளில் சுமார் 103 மாணவர்களும், முனைவர் பட்டப் படிப்புகளில் சுமார் 192 மாணவர்களும் கல்வி பயின்று வருகிறார்கள் என தெரிவித்தனர். பின்னர் குழு, கே.கே. நகர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியை சென்று பார்வையிட்டது.

பின்னர் குழு, திருச்சிராப்பள்ளியில் உள்ள கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2013 மார்ச் 12, செவ்வாய்க்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.15 மணியளவில், சென்னை–600 002, ஒமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1–இல் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. கு. நல்லதம்பி
திரு. வ. நீலகண்டன்
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)

திருமதி. சி. சகுந்தலா . . சார்புச் செயலாளர்

2013–2014 வரவு செலவுத் திட்ட வெளியீட்டில் "சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையினை "சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை" எனவும், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையினை" தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை" எனப் பெயர் மாற்றம் செய்வதற்கான நிதித்துறையின் கருத்துருவிற்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

2013 மார்ச் 18, திங்கட்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில், கரூர் மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. ப. தன்சிங்
திரு. அ. பாப்பா சுந்தரம்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . குழு அலுவலர்
(துணைச் செயலாளர் நிலை)

குழு, கரூர் மாவட்டம், தாந்தோணி, சுங்ககேட் பகுதியில் அமைந்துள்ள அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவியர் விடுதியைப் பார்வையிட்டது. குழுவை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் விடுதி காப்பாளினி அவர்கள் வரவேற்றனர். இவ்விடுதியில் அனுமதிப்பப்பட்ட மாணவியர்களின் எண்ணிக்கை 50 என்றும், தற்போது விடுதியில் சேர்ந்துள்ள மாணவியர்களின் எண்ணிக்கை 54 என்றும், இவர்கள் அனைவரும் கரூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. மாணவிகளிடம் உணவின் தரம் குறித்து வினவியபோது தங்களுக்கு சரியான முறையில் உணவு தயார் செய்யப்பட்டு வழங்கப்படுவதாகவும், வாரத்தில் ஒரு நாள் அசைவ உணவு வழங்கப்படுவதாகவும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான உணவு வழங்கப்படுவதாகவும் தெரிவித்தனர். மாணவிகள் தாங்கள் 25 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள பாளையம் போன்ற கிராமத்திலிருந்து வந்து தங்கி கல்வி பயின்று வருவதாகவும் தங்கள் பெற்றோர் வசிக்கும் பகுதிகளில் விடுதி வசதி, பள்ளி வசதி இல்லையென்றும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

பின்னர் குழு, கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் கல்வித் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2013 ஏப்ரல் 26, செவ்வாய்க்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாள், வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில், சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1ல் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. கே. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. அ. பாப்பாசுந்தரம்
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	. .	செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன்	. .	இணைச் செயலாளர்
திரு. க. பூபதி	. .	குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திருமதி. சி. சகுந்தலா	. .	சார்புச் செயலாளர்

குழு, சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் இல்லக் குடியிருப்பு உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறையில் **"உயர் கல்வி"** குறித்த மதிப்பீடுகள் தொடர்பாக உயர் கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் துறையின் இதர அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

2013 மே 10, வெள்ளிக்கிழமை

2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு மே திங்கள் 10 ஆம் நாள், வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில், சென்னை–9, சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்திலுள்ள குழுக் கூட்ட அறையில் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. அ. பாப்பாசுந்தரம்
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்
திருமதி. சி. சகுந்தலா . . சார்புச் செயலாளர்

குழு, சென்னை–9, சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்திலுள்ள குழுக் கூட்ட அறையில் "உயர் கல்வி" குறித்த வரைவு அறிக்கைக்கு குழு தனது ஒப்புதல் அளித்தது.

பரிந்துரைகளின் சுருக்கம்

1. துறை மேற்கொள்ளவிருக்கும் பணிக்காக, குழு தனது மகிழ்ச்சியினை தெரிவித்துக் கொள்கிறது. சமுதாயத்தில் மாற்று திறனாளிகளின் முன்னேற்றம் மிகவும் முக்கியமானது ஒன்று என்பதால் துறை எண்ணியுள்ள பணிகளை விரைந்து முடிக்கப் பெற்று திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.21)

2. மாணவர்கள் பயன்பெறும் வகையில் துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கையினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.23)

3. மாற்றுத்திறனாளிகளுக்கான தகவல் தொடர்பு தொழிற்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் பெண்களுக்கான தகவல் தொடர்பு தொழிற்நுட்பத்துடன் கூடிய சுயவேலைவாய்ப்பு மையம் அமைப்பதற்கு துறை திட்டமிட்டபடி நடவடிக்கையை மேற்கொண்டு அமைக்கப்பெற வேண்டும் என்றும், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 27)

4. துறை நிர்ணயித்த காலத்திற்குள் மேற்படி மையத்தினை அமைத்து அதன் முழு பயனைப் பெறுவதற்கு அப்பகுதியில் உள்ள கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு குறிப்பாக அரசு கல்லூரிகள் மற்றும் அரசு பள்ளிகளில் சரியான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.29)

5. மேற்படி காட்சிக்கூடம் அமைக்கப்பெற்ற பின் துறைரீதியான நடவடிக்கையின் ஒரு பகுதியாக கல்லூரி கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியவர்களுக்கு காட்சிக் கூடம் குறித்த சிறு தகவல்களுடன் ஒரு சுற்றரிக்கையினை உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.31)

6. ஊரகப் பகுதியில் உள்ள மாணவர்கள் முழு பயன் பெற துறையின் அப்பகுதியின் மண்டல இணை இயக்குநர் அளவில் நடமாடும் கணினி பேருந்தின் வருகை குறித்து ஒரு காலவரையறை (Time Frame) நிர்ணயித்து அதனை போதிய கால அவகாசத்திற்கு முன் துறைரீதியாக சுற்றரிக்கையின் மூலம் அறிவிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.33)

7. துறை மேற்படி நடைமுறையினை தொடர்ந்து பின்பற்றி வெற்றி இலக்கினை மேலும் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.37)

8. துறை தெரிவித்துள்ள கல்லூரிகள் அமைப்பதற்கான தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் துரித நடவடிக்கையினை மேற்கொண்டு விரைவில் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.41)

9. மாணவர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினியை சரியான முறையில் பயன்படுத்தி மாணவர்கள் பயன்பெறுகிறார்களா என துறை சார்பாக மாதிரி ஆய்வு (Sample Survey) ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.
(பத்தி எண். 44)

10. இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் முழு பயனைப் பெற துறைரீதியான சரிபார்த்தலை உரிய முறையில் மேற்கொண்டு மாணவர்கள் அந்த கல்வி ஆண்டிலேயே பயன்பெறும் வகையில் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.48)

11. மேற்படி திட்டத்தின் கீழ் மாணவர்கள் பயன்பெறும் வகையில் துறை தேர்வு செய்யப்பட்டுள்ள பத்து பல்கலைக்கழகங்களிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் மாணவர்களுக்கான செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள் மற்றும் அவற்றிற்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உரிய முறைபடி விரைவில் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்றும், மாணவர்களின் செயல்பாடு குறித்து ஒவ்வொரு பல்கலைக் கழகங்களிலும் மாதிரி ஆய்வு (Sample Survey) ஒன்றினை மேற்கொண்டு அதன் அடிப்படையில் துறை கண்ட முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.. (பத்தி எண்.53)

12. திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த மையங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையும் மற்றும் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும், விரிவான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.58)

13. துறை தெரிவித்துள்ள நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும், அளிக்கப்படும் பயிற்சி குறித்தும் அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.61)

14. மையம் அமைப்பதற்கான நோக்கத்தின் முழு வெற்றியினைப் பெற மையத்தின் இயக்குநர், அதன் செயல்பாட்டை கண்காணித்து அவ்வப்போது ஆய்வினை மேற் கொள்ள வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.65)

15. மாணவர்களின் கல்வி பாதிக்காத வண்ணம் அவர்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை சம்பந்தப்பட்ட துறைகள் குறித்த காலத்திற்குள் வழங்கினால் மட்டுமே திட்டத்தின் கீழ் மாணவர்கள் முழு பயனை பெற முடியும் என்பதால், சம்பந்தப்பட்ட துறைகள் துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.70)

16. கல்லூரி மாணவியர்களுக்கான சிறப்பு பயிற்சி திட்டம் என்பதால் துறை தெரிவித்தவாறு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கபெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 76)

17. துறை தெரிவித்துள்ள பாடப்பிரிவுகள் நீங்கலாக, இதர பாடப் பிரிவுகளை கண்டறிந்து அவற்றையும் பயிற்சி பட்டியலில் சேர்த்து மாணவர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.81)

18. தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் இயக்குநர் தனது இசைவினை தெரிவித்துள்ளதால், அவ்விடத்தில் மேற்படி மையத்தை அமைக்க துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.84)

19. மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லூரிக்கான கட்டிடப் பணிகள் அனைத்தையும் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.87)

20. மாணவர்களின் நலன் கருதி வெவ்வேறு அரசாணைகளின் வாயிலாக ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புவதற்கு துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.92)

21. குழு, அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, உதகையில் ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்வதில் உள்ள இடர்பாடுகளைக் களைந்தும், தேவையிருப்பின் அரசின் விதி தளர்வு பெற்று விரைவில் ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.96)

22. குழு, அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்பத்தூரின் ஒப்பந்தப்புள்ளியினை விரைவில் இறுதி செய்து பணிகள் துவங்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.97)

23. எனவே, கல்லூரி நிர்வாகம் சென்னை மாநகராட்சியின் அனுமதியினை விரைவில் பெறுவதற்கு துரிதமாக நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் அனுமதி பெற்ற பின் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளியினை கோரியும், இறுதி செய்தும்பணிகளை துவங்கி குறித்த காலத்திற்குள் முடிக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து, விரிவான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.99)

24. எனவே, துறை சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகத்திற்கு ஒரு காலவரையறையினை நிர்ணயித்து விடுதிக்கான வரைபடத்திற்கு உள்ளாட்சி அமைப்பிடமிருந்து அனுமதி பெற்று பணிகள் துவங்கப்பெற வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.101)

25. துறை நிர்ணயித்த காலத்திற்குள், கல்லூரி நிர்வாகம், பணிகளை துவங்கப்பெறவில்லை என்றால் வழங்கப்பட்ட தொகையினை அரசாங்க விதிகளின்படி சம்பந்தப்பட்ட கல்லூரியிடம் பிடித்தம் செய்து அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.102)

26. துறை, கல்லூரிக்கு ஒரு காலவரையரையினை நிரணயித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு விடுதிக்கான கட்டிடத்தை முடிக்கப்பெற வேண்டும் என்றும், கல்லூரி நிர்ணயித்த காலகெடுவிற்குள் முடிக்கப்பெறவில்லையென்றால் துறை அரசு விதிகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்ட தொகையினை பிடித்தம் செய்து அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.105)

27. குழு, மேற்கண்ட ஆய்வின்போது, குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், அவற்றின் மீது துறை உரிய முறையில் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.107)

28. மத்திய அரசின் பரிசீலனையில் உள்ள கருத்துருவிற்கு விரைவாக ஒப்புதல் பெற்று ஒருங்கிணைந்த உயர்திறன் பயிற்சி மையம் அமைப்பதற்கு துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.110)

29. மாணவர்களின் நலன் கருதி பெறப்பட்ட குறிப்புரையின் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கு துறை விரைவாக நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. இதன் தொடர் நடவடிக்கை குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.114)

30. மேற்படி 3 கட்டிடங்களுக்கான மதிப்பீடுகளை விரைவாக தயாரித்து பரிசீலனை செய்து புனரமைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.116)

31. கழிவு அறிக்கையினை விரைவாக தயாரித்து, தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.118)

32. சிதலமடைந்த கட்டிடத்தின் பகுதியினை புனரமைப்பதற்கான மதிப்பீடுகளை உடன் தயாரித்து, ஒப்புதல் அளித்து, பணிகளை விரைவாக துவங்கி முடிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.122)

33. சிதலமடைந்த கட்டிடங்களை கழிவு செய்வதற்கான அறிக்கையினை உடன் தயாரித்து தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 124)

34. மேற்படி கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பகுதி கட்டிடத்தினை பராமரிப்பதற்கான மதிப்பீட்டை விரைவில் தயாரித்து, ஒப்புதல் அளித்து, பணிகள் துவங்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.126)

35. துறை வரலாற்று சின்னங்களாக உள்ள கட்டிடங்கள் என்பதால் தொழில்நுட்ப இயக்குநரகத்தின் மூலம் சிறப்பு இனமாக கருதி நிதி துறையினை கலந்து ஆலோசித்து கூடுதல் நிதியினைப் பெற்று நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 128)

36. பாட திட்ட மேம்பாடு, தேர்வு முறை சீரமைப்பு குறித்தும் மற்றும் மன்றத்தால் உயர்தொழில்நுட்பக் கொள்கை குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.131)

37. நல் ஆளுகைக்கான தேசிய மன்றத்திற்கு ஒரு மையம் நிறுவுவதற்கு துறை விரிவான நடவடிக்கையினை மேற்கொண்டு அமைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.134)

38. திறன் மேம்படுதல், தொழில் திறன் வளர்ப்பது ஆசிரியர் மற்றும் கற்பித்தல், கொள்கை குறித்த தேசிய பணி, செயல்பாடுகள், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுகள் முறையில் முடிவுகள் கட்டமைப்பு ஆவண அமலாக்கம் போன்றவை குறித்து மன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.135)

39. மாணவர்களின் நலன் கருதி, துறையின் பரிசீலனையில் உள்ள கருத்துருவிற்கு விரைவாக ஒப்புதல் அளித்து ஊக்கத்தொகையினை கணிசமான அளவு உயர்த்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.139)

40. உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி அமைப்பதற்கான கோரிக்கைகள் வரப்பெறாத பல்கலைக்கழகங்களுக்கு விவரங்களை அனுப்புவதற்கு ஒரு காலவரையரையினை நிர்ணயித்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் தேவையான உள்கட்டமைப்பு / அடிப்படை வசதிகள் செய்புமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.142)

41. மாணவர்களின் நலன் கருதி துறை மேலும் காலதாமதம் செய்யாமல் ஆசிரியர் தேர்வு வாரியத்துடன் இணைந்து விரைவாக நடவடிக்கையினை மேற்கொண்டு காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பப்பட வேண்டும். (பத்தி எண்.148)

42. மீதமுள்ள ஆசிரியரல்லாத காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.151)

43. தவறான எண்ணிக்கையில் பணியாளர் எண்ணிக்கையை கல்லூரிகள் வழங்குகின்றன என்பதைக் குழு ஏற்கவில்லை. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆசிரியர்/ ஆசிரியரல்லாத பணியிடங்கள்/ துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் என அனைத்து விவரங்களும் அதாவது அரசால் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை (Sanctioned Strength of Posts) துறைத் தலைமையிடம் இருக்க வேண்டும். கூடுதல் மாணவர்கள் சேர்ந்திருப்பின் அதற்கான பணியிடங்களை அரசிடம் கோரி தோற்றுவிப்பது துறையின் பொறுப்பு ஆகும். எனவே, அனைத்து காலிப்பணியிடங்களை நிரப்பிடவும், அடிப்படைப் பணியாளர் நிமனத்தைப் பொறுத்தவரை நிதித்துறை கலந்தறிதலுடன் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.154)

44. தமிழ்நாட்டில் உள்ள இதர கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வினை அவ்வப்போது மேற்கொண்டு அக்கல்லூரிகளில் இல்லாத பாடப்பிரிவுகளை தொடங்கப்பட வேண்டும் என்றும், எம்.பில்., பி.எச்டி. பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்ட பின்னர் அறிவியல் பாடப்பிரிவுகளுக்குத் தேவையான ஆய்வகம் அமைப்பதற்கு துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.157)

45. 2012–2013 ஆம் நிதியாண்டு முடிவுற்றதால் மேலும் காலதாமதம் இல்லாமல், கல்லூரி கல்வி இயக்ககத்திற்கென சொந்த கட்டிடம் கட்டுவதற்கான கருத்துருவிற்கு நிதித்துறையின் ஒப்புதல் விரைவில் பெற்று தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.160)

46. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட துறை நடவடிக்கையை மேற்கொண்ட பின்னர் குழுவிற்கு அறிக்கையாக அனுப்பப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.163)

47. துறை தெரிவித்துள்ளவாறு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் மண்டல பொறியாளர் ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை ஒன்று குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.166)

48. துறை தெரிவித்தவாறு, மேற்படி கல்லூரிகளுக்கான இடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.169)

49. துறை தொடர் நடவடிக்கையினை மேற்கொண்டு மேற்படி கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கான இடத்தினை கையகப்படுத்தி பணிகள் துவங்கப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.172)

50. துறை வருவாய் துறையிடமிருந்து இறுதி ஆணையினை விரைவாக பெற்று கல்லூரிக்கான நிரந்தர கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான இடத்தினை கையகப்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.175)

51. மேற்படி கல்லூரிக்கான அனைத்து பணிகளையும் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற்று மாணவர்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கையினை துறை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.178)

52. சிங்கிப்பட்டி கிராமத்தில் இயங்கும் அரசு பொறியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்கப் பெற வேண்டும் என்றும், மாணவர்களின் நலன் கருதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தேவையான கணினி மற்றும் இதர உபகரணங்கள் பெற்று வழங்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.181)

53. பல்கலைக் கழகங்களின் கீழ் செயல்படும் உறுப்புக் கல்லூரிகளின் செயல்பாட்டை மேம்படுத்த துறை குழு ஒன்றினை அமைத்து நிதி ஆதாரங்களை பெருக்குவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பெற வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.187)

54. மேற்படி கல்லூரியிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவிற்கு விரைவாக ஒப்புதல் அளித்து LCD Projector, வழங்குவதற்கும், LCD Projector வழங்க கோரிக்கை வரப்பெறாத இதர கல்லூரிகளுக்கு ஒரு காலவரையறையினை நிர்ணயித்து தேவையின் அடிப்படையில் வழங்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.190)

55. துறை நிர்ணயித்தது போல் வரும் கல்வி ஆண்டு முதல் அனைத்து கல்லூரிகளிலும் மேற்படி முறையினை பின்பற்ற நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.193)

56. மாணவர்களின் முன்னேற்றத்திற்காக துறை தெரிவித்தது போல் மாணவ மாணவிகளுக்கு மின்னஞ்சல் அடையாளத்தை உருவாக்கவும், 2013–14 ஆம் கல்வி ஆண்டு முதல் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், இணைய தளம் மற்றும் கணினி வழியாக பல்லூடுக்கத்தின் மூலம் பாடங்களை பயிற்று வைக்கும் முறையை செயல்படுத்த வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.196)

57. மேற்குறிப்பிட்ட பாடப் பிரிவுகளுக்கு இந்த கல்வி ஆண்டு முதல் மாணவர் சேர்கை நடைபெறும் வகையில் துறையிடம் உள்ள கருத்துருவிற்கு விரைவில் ஒப்புதல் அளித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.199)

58. பயன்பாட்டு சான்றினை (Utilisation Certficate) அரசினர் பலவகை தொழில்நுட்ப கல்லூரி முதல்வரிடமிருந்து பெற்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், மீதமுள்ள தொகையை நிதி ஒப்பளிப்பு செய்ய துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.202)

59. மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்தருவிற்கு விரைவில் ஒப்புதல் பெறும் வகையில் நடவடிக்கையை மேற்கொண்டு இரண்டாவது தவணையாக கோரியுள்ள தொகையினைப் பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக செலவு செய்து கல்லூரியினை தன்னிறைவு பெற்ற கல்லூரியாக உருவாக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.205)

*****

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

29.06.2012	சென்னை
08.08.2012	தஞ்சாவூர்
09.08.2012	திருவாரூர்
10.08.2012	நாகப்பட்டினம்
16.10.2012	தருமபுரி
17.10.2012	கிருஷ்ணகிரி
18.10.2012	சேலம்
01.11.2012	சென்னை
02.01.2013 முதல் 09.01.2013 வரை	மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கு ஆய்வுப்பயணம்
21.02.2013	புதுக்கோட்டை
22.02.2013	திருச்சிராப்பள்ளி
12.03.2013	சென்னை
18.03.2013	கரூர்
26.04.2013	சென்னை
10.05.2013	சென்னை

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மதிப்பீட்டுக் குழு
(2012–2013)
பத்தாவது அறிக்கை
பதினான்காவது பேரவை
பிழைதிருத்தப்பட்டியல்

வ. எண்.	பக்கம் எண்	பத்தி எண்	பிழை	திருத்தம்
1	i	IX	வெளிப்படத்துதல்	வெளிப்படுத்துதல்
2	ii	XXIII	மாணவ/மாணவியர்கு	மாணவ/மாணவியர்க்கு
3	iii	XXIV	கல்லூரிகளி	கல்லூரிகளில்
4	2	10	Word Class Standard	World Class Standard
5	4	21	முக்கியமானது	முக்கியமான
6	5	23	எனவும் பரிந்துரை	எனவும் குழு பரிந்துரை
7	9	43(ii)	பொறியியற்	பொறியியல்
8	42	செயலகம்	துணைச் செயலாளர்	இணைச் செயலாளர்
9	50	2	எனவும் பரிந்துரை	எனவும் குழு பரிந்துரை
10	52	18	என்றும் பரிந்துரை	என்றும் குழு பரிந்துரை

அ.மு.பி.ஜமாலுதீன்
செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS